விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 094 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 09 வெள்ளிக்கிழமை (22.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சபாநாயகர் மகிந்த யாப்பாவுக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

## ஆதரவாக 75 வாக்குகள் எதிராக 117 வாக்குகள்



(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேலதிக வாக்குகளால் தோற்கடிக் கப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும் எதிராக 117 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

(02ஆம் பக்கம் பார்க்க)

### ஷெல் எரிபொருள்

## விற்பனை ஆரம்பம்

(கொழும்பு)

ஷெல் எரிபொருள் நிறுவனத்தின் விற்பனை இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை எரிபொருள் சந்தையில் புதிதாக சேர்க்கப் பட்டுள்ள Shell-RM Parks நிறுவனத்திற்கு 15

### முல்லைத்தீவில்

## மோட்டார் ஷெல் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் தனியார் காணியிலிருந்து மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - கொக்குளாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளியமுனை பகுதியிலுள்ள தனியார் 15

## இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

### 3ஆவது நாளாக தொடரும் உணவுத் தவிர்ப்பு



15

## ரணில் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

வலிகாமம் வடக்கில் 278 ஏக்கர் காணி விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வில் பங்கேற்கவுள்ளார். (ம-7,10)

## இணையச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும்

### சபையில் அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இணையவழி பாதுகாப்பு சட்டத்தில் திருத் தங்களை மேற்கொள்வது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். 15

### லங்கா சதொசவில்

## 12 பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மக்களுக்கு வழங் கப்படும் சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

அதன்படி 12 பொருட்களின் விலை குறைக்கப் பட்டுள்ளதாகவும் 15

## சிறுபான்மையின சமூகங்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இந்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

வவுனியா - வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தின பூஜை வழிபாடுகளின் போது சிலர் கைது செய்யப் பட்டதை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில், 02

### வெடுக்குநாறிமலையில் கோயில்கள் கிடையாது

## பௌத்த மரபுரிமைகள் உள்ள இடங்களுக்குச் சென்றால் கைதாவீர்கள்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

வெடுக்குநாறி மலையில் கோயில்கள் கிடையாது. பௌத்த மரபுரிமைகள் உள்ள இடங்களுக்குச் சென்றால் கைது செய்யப்படுவீர்கள் என பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றில்நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு எச்சரிக்கை 02

### இலங்கைக்கு அடுத்த கட்டக் கடன்

## 337 மில்லியன் டொலர் ஐ.எம்.எப் விடுவிக்கின்றது

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கு இடையில் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான இரண்டாம் மீளாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பொருளாதார கொள்கைகள் தொடர்பான ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, நிறைவேற்றுச் சபை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்
# சர்வதேச இந்து மாநாடு






(யாழ்ப்பாணம்)

இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும் எனும் தொனிப்பொருளில் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாநாடு தலைவர் ச.பத்மநாபன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீ சற்குணராஜா சகிதம் விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

விருந்தினர்களின் மக்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நந்திக் கொடி ஏற்றும் வைபவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

வரவேற்பு உரையை மாநாட்டின் செயலாளர் பேராசிரியர் வி.பவனேசன் நிகழ்தியதுடன் பிரதம விருந்தினர் உரையை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து இரண்டாவது சர்வதேச இந்து மாநாட்டின் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்து கற்கைகள் பீடச்சபையின் ஏகோபித்த ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையை அடைந்த அமரர் கு.நகுலேஸ்வர குருக்களுக்கு மெய்ப்பொருள் விருதும், சைவ சமூக பணியாற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனுக்கு ஞானவாய்ச்சியன் விருதும், இலங்கையில் இந்து பண்பாட்டுக்கு உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு சிவநிதி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது

(ம-7,10,33)

## பௌத்த...

விடுத்துள்ளார். இதன் போது மேலும் உரையாற்றிய அவர், பாராளுமன்ற விவாதத்தின் போது வெடுக்குநாறிமலை பற்றி பேசப்பட்டது.

கோயிலுக்கு சென்றவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. வெடுக்குநாறி மலையில் எந்த கோயில்களும் இல்லை என்பதை தெளிவாக குறிப்பிடுகிறேன்.

இந்த மலையை தொல்பொருள் திணைக்களம் அநுராதபுர யுகத்துக்கு சொந்தமான தொல் பொருள் மரபுரிமைகள் உள்ள பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளது.

பௌத்த மத மரபுரிமைகள் உள்ள பகுதியில் பிறிதொரு தரப்பினர் தமது மத வழிபாடுகளை முன்னெடுக்கும் போது முரண்பாடுகளே தோற்றம் பெறும்.

பௌத்த மரபுரிமைகள் உள்ள இடங்களுக்கு சென்றுமுறையற்ற வகையில் செயற்பட்டால் பிரச்சினைகளே தீவிரமடையும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. சட்டவிரோதமான முறையில் எவர் செயற்பட்டாலும் கைதுகள் இடம்பெறும்.

இந்து கோயில்களுக்கு சென்று பிற மதத்தவர்கள் முறையற்ற வகையில் செயற்பட்டால் அவர்களையும்நாங்கள்கைது செய்வோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாக்குகளை எதிர்பார்த்து ஒருதலைபட்சமாக கருத்து தெரிவிப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம-7,10)

## நம்பிக்கை...

பாராளுமன்றத்தில் அண்மையில் அனுமதிக்கப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டமூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி சபாநாயகரினால் நிறைவேற்றப்பட்டமை, பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறி சபாநாயகர் செயற்பட்டமை ஆகிய இரு பிரதான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் கடந்த 5ஆம் திகதி கையளித்தன.

அதன் பிரகாரம் கடந்த 19 ஆம் திகதி முதல் நேற்று 21ஆம் திகதிவரை விவாதம் இடம்பெற்ற நிலையில் நேற்று மாலை 4,30 மணிக்கு விவாதம் முடிவுக்கு வந்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக எதிர்க் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே.வி.பி.. தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றை சேர்ந்த எம்.பி.க்கள் ஆதரவாக வாக்களித்தனர். என்றாலும் விக்னேஸ்வரன் எம்.பி சபையில் பிரசன்னமாகவில்லை.

இந்நிலையிலேயே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேலதிக வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

அதேவேளை, நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கட்சித் தலைவர்களான அநுரகுமார திஸாநாயக்க, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சீ.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட 33பேர் கலந்துகொண்டிருக்கவில்லை. (ம-7,10)

## சிறுபான்மை...

இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களில் தலையீடு செய்வதை உடன் முடிவுக்கு கொண்டுவருமாறு இலங்கை அரசாங்கம் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவுறுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின சமூகங்களின் மத உரிமைகளை உறுதிப்படுத்துமாறு பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத்தரப்பினருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,10)

75 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

சண்முகம் தேவராசா



Happy Birthday

இரவுகளைக்
கடன் வாங்கி
விழிகளுக்குள்
போர் நடத்தி

வியர்வைக்குள்
அன்பை மறைத்து
மனசுக்குள்
ஆசைகளை அமர்த்தி

ஈன்றவர்க்காய்
தமைக்கொடை செய்து
அன்பின் ஊற்றாய்த் தழுவி

தன் இளமைகளை
தொலைத்து

நதியின் வடிவில்
முரடுகளைத்தாண்டிப்
புன்னகைக்கும்
உருவம் கொடுத்த
கடவுளே தந்தை தேவராசா



அகவை எழுபத்தைந்தாவது
ஆண்டில் கால்பதித்து
நித்திலம் போற்ற,
நித்தமும்
நிமிர்ந்திட வேண்டி,
அகவை நாளில்
மனதார வாழ்த்தி
மனம் மகிழ்கின்றோம்.

(175)

வாழ்த்துவோர் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 2024.04.07 ஆம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தலைவர் DR.D.மாதவநாத் அவர்களின் தலைமையில் வைத்தியசாலை சிகிச்சை மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

01. தலைமையுரை
02. செயலாளர் அவர்களினால் சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
03. செயலாளர் அவர்களினால் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்
04. பொருளாளர் அவர்களினால் ஆய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
05. கிடைக்கப்பெற்ற பிரேரணைகள் ஆராய்தல்
06. புதிய நிர்வாக சபை தெரிவு
07. பிற விடயங்கள்

பிரேரணைகள் ஏதும் இருப்பின் 2024.03.31 ஆம் திகதிக்கு முன்னதாக **செயலாளர், நோயாளர் நலன்புரிச்சங்கம், பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வதோடு நடைபெறும் கூட்டத்திற்கு சமூகமளித்து வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கியுதவுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

Dr.D.மாதவநாத்
தலைவர்,
நோயாளர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச வைத்தியசாலை,
வல்வெட்டித்துறை.

திரு.து.சத்திவேல்
செயலாளர்,
நோயாளர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச வைத்தியசாலை,
வல்வெட்டித்துறை.

(C-8586)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய் புற்றுநோயினால் தினசரி 3 மரணங்கள்!

(கொழும்பு)

**வாய் புற்றுநோய் பாதிப்பினால் தினசரி 3 மரணங்கள் பதிவாகுவதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.**

வெற்றிலை, புகையிலை உள்ளிட்டவற்றை பயன்படுத்துவதன் காரணமாக பெரும்பாலான இளைஞர்கள் வாய் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பல் மருத்தவ சங்கம் தெரிவித்துள்ளது.

வாய் புற்றுநோய் பாதிப்புக் காரணமாக இருதய நோய் மற்றும் நிமோனியா உள்ளிட்ட நோய்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், வாய்புற்றுநோய் பாதிப்பு காரணமாக தினசரி 6 நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. (நி-5)


## ஆட்டோ-மோட்டார் சைக்கிள் மோதி வவுனியாவில் விபத்து-இருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, வைர புளியங்குளம் புகையிரதநிலைய வீதியில் நேற்று மதியம் இவ் விபத்து இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் புகையிரத நிலைய வீதி ஊடாக சென்ற முச்சக்கரவண்டியும் வவுனியா நகரம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு வாகனங்களும் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் குறித்த விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-250)



## வெப்பமான காலநிலையில் பணிபுரியும் கர்ப்பிணி பெண்களுக்கு ஆபத்து

### ஆய்வில் தகவல்

(சென்னை)

அதிக வெப்பமான கால நிலையில் பணிபுரியும் கர்ப்பிணி பெண்களுக்கு இறந்த பிறப்புகள் மற்றும் கருச்சிதைவு ஏற்படும் அபாயம் அதிகம் என்று இந்தியாவில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

சென்னையில் உள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்று 2017 முதல் தற்போது வரை தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டில் வெப்பமான சுற்றுச் சூழல் நிலைமைகளின் கீழ் பணிபுரியும் 800 கர்ப்பிணிப் பெண்களைப் பயன்படுத்தி இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண்கள் விவசாயம், செங்கல் உற்பத்தி மற்றும் உப்பு உற்பத்தி போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அதில் 5 சதவீதம் பேருக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதே நேரத்தில் இறந்த பிறப்புகள் மற்றும் முன் கூட்டிய பிறப்புகள் 6.1 சதவீதமாக பதிவாகியுள்ளதாக தெரியவந்துள்ளது. (நி-5)

## நாணயத்தாள்களை சேதப்படுத்தினால் மூன்று வருட சிறைத்தண்டனை

### இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் நாணயத்தாள்களை சேதப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என இலங்கை மத்திய வங்கி பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் அவ்வாறு நாணயத்தாள்களை சேதப்படுத்துவோருக்கு மூன்று வருட சிறைத்தண்டனையுடன் பெருந்தொகையான பணமும் அபராதமாக விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பதவி விலகினார் டிலான் பெரேரா



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவும் பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவிலிருந்து (கோப்) விலக தீர்மானித்துள்ளார்.

கோப் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டமையை அடுத்து அதன் உறுப்பினர்கள் பதவி விலகல் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## முட்டை விலை வீழ்ச்சி

### முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம்

(கொழும்பு)

இலங்கை சந்தையில் இந்திய முட்டையின் விலையுடன் ஒப்பிடுகையில் உள்ளூர் முட்டைகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும், உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 40 ரூபாவாகவும் உள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இந்நிலையில் இந்தியாவில் இருந்து முட்டைகள் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## ஹெய்ட்டியில் ஆயுதக்குழுக்களால் பதற்றம் இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை

### வெளிவிவகார அமைச்சு தகவல்

(ஹெய்ட்டி)

ஹெய்ட்டியில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக உள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து வெளிவிவகார அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

ஹெய்ட்டியின் தலைநகரமான போட் ஓ பிரின்ஸின் பல வீதிகளில் ஆயுதமேந்திய தரப்பினர் தாக்குதல்களில் ஈடுபடுவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், அந்த தாக்குதல்களில் இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் ஹெய்ட்டியில் உள்ள இலங்கையர்களை பணியமர்த்தும் நிறுவனங்கள் தொடர்ந்தும் அவர்களுடன் தொடர்பில் உள்ளதாகவும் அவர்கள் மீது கவனம் செலுத்தி வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## மன்னார் காற்றாலை மின் உற்பத்தி சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தலாம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை

(கொழும்பு)

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி உற்பத்திக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் அதிகரித்த முதலீடு உகந்ததாக இருந்தாலும், இத்தகைய திட்டங்களை செயற்படுத்துவதில் சிறந்த மாற்று இடம் மற்றும் மிகவும் பயனுள்ள முதலீட்டு பிரதேசங்களை தெரிவு செய்வது அவசியம்.

பறவைகள் சரணாலயமாக விளங்கும் மன்னாரை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் காற்றாலை மின் நிலைய நிர்மாணத் திட்டம் சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய செயற்றிட்டமாகவே பல நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டீசல் மாபியாவிற்கு இடமளிக்காது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நடைமுறைப் படுத்துவதில் மாற்று இடங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.


இத்திட்டத்திற்கு இதை விட பொருத்தமான பல இடங்கள் உள்ளன என் பதை விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஐபிஎல் இன்று ஆரம்பம்

## தயாரானது சேப்பாக்கம் மைதானம்



இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 17ஆவது சீசன் இன்று முதல் நடைபெற உள்ளது.

இந்த தொடரில் பங்கேற்க இருக்கும் 10 அணிகளும் தங்களது அணியின் வீரர்களை தயார் செய்து தற்போது தீவிர பயிற்சியிலும் ஈடுபட்டனர்.

நடப்பு ஐபிஎல் தொடரின் முதற்போட்டி சென்னையில் நடைபெற உள்ளது. இதில் ஆர்சிபி - சிஎஸ்கே அணிகள் மோதுகிறது.

ஐபிஎல் தொடக்க விழா சேப்பாக்கம் மைதா னத்தில் நடக்கவிருப்பதால் அதற்கான வேலைகள் தற்போது முழுமையாக்கப்பட்டுள் ளன.

சென்னையில் இதுவரை இரு அணிகளும் 8 முறை மோதியுள்ளன. இதில் ஒரு முறை ஆர்சிபியும் 7 முறை சிஎஸ்கே அணியும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3068

### கஜானா




### கௌசி





### அஜி




### பவி




### பிருத்தி




### சிறி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 விசைப் படகுகளுடன் 32 தமிழக மீனவர்கள் கைது

(கரணவாய்)

எல்லை தாண்டி மீன் பிடித்த 32 தமிழக மீனவர்கள் ஐந்து விசைப்படகுகளுடன் இலங்கை கடற்படையினரினால் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மீன்பிடித்துறை முகங்களில் இருந்து நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறைக் கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மேலும் மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு விசைப் படகையும் அதிலிருந்த ஏழு மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்து மன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்த தமிழக மீனவர்கள் 32 பேர் 5 படகுடன் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க உள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.(நி-5-60-33)

# ஆடல் அரங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறையினருடன் இணைந்து வழங்கும் "ஆடல் அரங்கம்" நிகழ்வு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தியாவின் பிரபல பரதநாட்டிய கலைஞர் கலைமாமணி முனைவர் சரளாவின் நெறியாள்கையில் அவரது மாணவி தேவியின் சிறப்பு பரதநாட்டிய நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்கள் இணைந்து வழங்கும் நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (நி-5)

# சட்டவிரோத கசிப்புடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு உடையார் கட்டுப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் பொதி செய்யப்பட்ட கசிப்பு பைக்கற்றுக்களுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு உடையார் கட்டு குரவில் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு விற்பனை இடம்பெற்றுவருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவலையடுத்து திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

160 சிறு சிறு பொதிகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்த 16 லீற்றர் சட்டவிரோத கசிப்பு பைக்கற்றுக்களுடன் 31 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்து ள்ளனர்.

குறித்த நபரிடம் மேற் கொள்ளப்பட்டுவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-5-299)

# ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் உபசக்தி ஸ்கந்த சமேதசோமாஸ்கந்தர் பஞ்சமூர்த்திகள் பஞ்சரதா ரோகணம் தேர்வடம் பிடித்து திருமுறை ஓதி இடம்பிடிப்போம் சிவலோகம் (23.03.2024)

**பண் ஒன்ற இசை பாடும் அடியார்கள் குடி ஆக மண்**
**இன்றி விண் கொடுக்கும் மணிகண்டன் மருவும்**
**இடம் எண் இன்றி முக்கோடிவாணாள் அது**
**உடையானைப் புண் ஒன்றப் பொருது**
**அழித்தான் புள்ளிருக்குவேளுரே.**

***சம்பந்தர் தேவாரம்.***

சிவசக்தியாகிய உமையம்மையாரின் வடிவம். அருள் சக்தியோடு கூடிய சிவமும். அழகிய வேலாயுதத்தையுடைய குழந்தை முருகனும், எல்லாத் திசைகளிலும், எல்லா உலகங்களிலும் நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம் முத்தியின்பத்தைக் கொடுக்கும் அருள்மூர்த்தி இந்தச் சோமாஸ்கந்தர் ஆகும். ஓம் நமசிவாய..

பூமியிலுள்ள மானுடரும் விண்ணிலுள்ள தேவர்களும், பிள்ளைப்பேற்றை விரும்பினால் கண்ணுதற் பெருமானும் உமையம்மையுமாகிய அவர்களது குழந்தை முருகனும் கலந்து நின்றதாகிய சோமாஸ் கந்தனை வழிபடுவீர்களாக என திருமாலுக்குச் சொல்லி அருளிய உமையம்மை எனும் உண்மை வாசகம். ஒன்றும் உளது. மகப்பேறு விரும்பி யாவாராயினும் இந்தச் சோமாஸ்கந்த வடிவைப் பூசித்து வழிபட மகப் பேறடைவர் "ஓம் நமசிவாய."

ஆனாய நாயனரின் "ஓம் நமசிவாய" எனும் எம்பெருமானின் திருஐந்தெழுத்தையும் தொடுத்து வேய்ங்குழலான துளை இசைக் கருவியில் வேறு வழியில் ஐம்புலன் செல்லாமல் இசையால் சராசரங்கள் எல்லாம் பொருந்த இசையமுதத்தை அளிப்பவரானார். "ஓம் நமசிவாய" வேய்குழலில் அண்டசராசரம். சிவன் காளை யூதியின் மீது இவர்ந்து எழுந்தருளி. பிறைமதிக்கு இடமான நீண்ட சடையானது தாழும்படிவான் வீதி வழியே வந்தார்.

தேவமங்கையர் தங்கள் விமானங்களில் வந்தார்கள். நாயனார் மேய்த்த பசுக்கூட்டம் பால் ஊட்டும் கன்றுகள் பால் ஊட்டுவதை நீக்கி நின்றனர். எருதுக் கூட்டமும், மான்,சகல விலங்குகள் எல்லாம் ஒன்றுகூடி பக்கத்தில் சேர்ந்து நின்றன வித்தியாதரர்களும். சாரணர்களும் கின்னரர்களும் எல்லோரும் தம்மை மறந்து விமானங்களில் வந்து சேர்ந்தனர்.

**"சான்றோரான ஆனாய நாயரின்**
**திருக்குழல்ஓம் நமசிவாய ஒலியை கேட்ட**
**முதல்வரான சிவபெருமான் சிவலோகம் வருவாரே!"**

நாளை சனிக்கிழமை நாம் சனீஸ்வர பகவான் கிரக தோஷம் தீர "ஓம் நமசிவாய" சனீஸ்வர பகவான் எனவும்" வேயுறுதோளிபங்கன் சம்பந்தரது தேவாரமும் படிப்போம்.

மனிதப் பிறவி இறைவனை அறியும் வாய்ப்பு. மனிதர்களாக பிறக்கும்போது பெற்றுள்ள நாம் இப்பிறவியில் இறைவனை அறியவும், அவன் தாள் (திருவடி) தொழுது பிறவிப்பயனை பெறவும் வேண்டும்.

உலகில் பல நோய்கள் அவையனைத்தையும் நீக்கி நல்லருள் புரிய வைத்தியநாதனாக டாக்டருக்கெல்லாம் டாக்டராக நம்மை அன்புடன் கவனித்து ஆரோக்கிய வாழ்வைத்தரும் பொருட்டு தாமாக வாலாம்பிகா அம்மையுடன் இறைவன் வந்து அமர்ந்துள்ள இடம் தான் ஸ்ரீமத் வைத்தீசுவரன் கோயில் ஓம் நமசிவாய. பிறவிப் பிணியையும் நீக்கும் வைத்தீஸ்வரன்

**தேர்வடம் பிடித்து திருமுறைகளை**
**ஓதி இடம்பிடிப்போம் சிவலோகம்**
**ஓம் சிவ, சிவ, சிவாய**
**ஓம் நமசிவாய**
**க.கு.க சிவபாலன்**



(சி-8585)

# இராசிபலன்

**22.03.2024**
**பங்குனி 09 , வெள்ளிக்கிழமை**
**துவாதசி காலை 7.02 மணிவரை**

**மகம் பின்னிரவு 6.00 மணிவரை**
**சுபநேரம் -6.16-7.46 மணிவரை**
**இராகுகாலம்-10.46-12.16 மணிவரை**

**பிரதோச விரதம்**
**சந்திராஷ்டமம்**
**பூராடம்.**

**வளவன்**




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்.




குடும்பச் சுமை கூடும், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், போசன சுகமுண்டு.




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




செய்தொழில் மேன்மையுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், உற்சாகமான நாள்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாது தாமதமாகலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.





உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**செய்தபின் வருந்துவதை விட செய்யாதிருப்பதே மேல்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனிஉத்தரப் பொங்கல் விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது

கிளிநொச்சி - கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கலின் ஆரம்ப வைபவமான விளக்கு வைத்தல் 17 ஆம் திகதி ஆரம்பமாகி பூசையை தொடர்ந்து பிரம்பு வழங்கப்பட்டு பாரம்பரிய முறைப்படி ஆலயத்திலிருந்து மாட்டு வண்டிகளில் பண்டமெடுத்து வருவதற்காக மீசாலை புத்தூர் சந்தியில் அமைந்துள்ள பண்டமரவடிக்கு சென்றுள்ளனர்.

இவ்வாறு பண்டமெடுப்பதற்காக சென்ற மாட்டுவண்டிகள் நாளை பிற்பகல் 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு நாளை மறுதினம் இரவு ஆலயத்தை வந்தடைந்ததும் பொங்கல் விழா நடைபெற உள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களை நிவர்த்தி செய்ய வருகின்ற அடியவர்களுக்கான போக்குவரத்து மற்றும் சுகாதார வசதிகள் என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (நி-5-315)


## தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம்
### அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

யா/கைதடி குருசாமி வித்தியாலயம் (வகை-II), யா/தனங்கிளப்பு அ.த.க பாடசாலை (வகை-III) ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கோரப்படுகின்றன.

இப் பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு-II மற்றும் வகுப்பு III ஐச்சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பொருத்தமான பாடசாலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி,பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 05.04.2024 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி, ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-5)





தென்மராட்சி வரணி திருவருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

# மருதடி விநாயகருக்கு இன்று கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (நி-5)

# 'பசுமை அமைதி விருதுகள்'
## 3 ஆவது தடவையாக மகாஜனவுக்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த யா/மகாஜனக் கல்லூரி மாணவி கனிமொழி கணேசானந்தன் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இவ்விருது தொடர்ந்து மூன்றாவது தடவையாக மகாஜனக் கல்லூரிக்கு கிடைப்பது சிறப்பம்சம் ஆகும். (நி-5-105)



குடத்தனை வடக்கு கடற்கரை பிரதேசத்தில் கரை ஒதுங்கிய பிளாஸ்ரிக், கண்ணாடி உட்பட்ட கழிவுப்பொருட்களை குடத்தனை வடக்கு கிராமமட்ட உத்தியோகத்தர்கள் தலைமையில் பருத்தித்துறை பிரதேசசபையின் ஒத்துழைப்புடனும் குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் ஆதரவிலும் குடத்தனை வடக்கு மக்கள் ஒன்றிணைந்து அகற்றினர். (படம்:-மகாலிங்கம்)

# 'பார்த்த சூடாமணி' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் பிரதேச செயலக ஆயுர்வேத பாதுகாப்பு சபையும் இணைந்து நடத்தும் மருத்துவர் நா. கணேசலிங்கநாதன் உரை எழுதிய 'பார்த்த சூடாமணி நூல் வெளியீடு வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உதவி பிரதேச செயலர் திருமதி கி.செந்தூரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச செயலர் கவிதா உதயகுமார், சிறப்பு விருந்தினராக சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் மருத்துவர்.ஜெ. கனகேஸ்வரி, கைதடி சித்தபோதனா வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர் சி. துரைரட்னம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். [illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 160 | 200 | 150-200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 | 170 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 300 | 270-300 |
| தக்காளி | 80 | 100 | 150 | 200 | 100-120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 150 | 150 | 120 |
| கோவா | 300 | 250 | 360 | 400 | 250 |
| கரட் | 350 | 400 | 450 | 450 | 300 |
| பூசணி | 200 | 150 | 180 | 160 | 150 |
| புடோல் | 180 | 150 | 160 | 150 | 120 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 200 | 180 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 250 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 350 | 550 | 550 | 500 | 450 |
| பாகற்காய் | 400 | 300 | 350 | 300 | 300-350 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 300 | 100-170 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 200 | -- |
| பயற்றங்காய் | 300 | 220 | 280 | 300 | 200-300 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 400 | 220 |
| பீற்றூட் | 300 | 200 | 300 | 300 | 200 |
| கறிமிளகாய் | 400 | 300 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 800 | 1200 | 500-900 |
| போஞ்சி | 300 | 200 | 300 | 300 | 220 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 160 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 | 40-60 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 300 | 120-160 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 80 | 80-110 | 50-100 |
| இராசவள்ளி | 350 | 300 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 150 | 150 | 200 | 300 | 70-100 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | — | 100 | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக் கழகத்தில் 16.03.2024 அன்று நடைபெற்ற 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியர்களான



செல்வி.மரியாம்பிள்ளை ஏலிஸ் ஏன்ஜெல்லி முதுகலைமாணி-கிறிஸ்தவம் 1 st class



திரு.சின்னராசா சிவேந்திரன் கலைமாணி



திருமதி.வினிதா ராகுலன் கலைமாணி

ஆகியோரை வாழ்த்தி மகிழ்வதோடு மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(169)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.



மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையின் புலம் பெயர்ந்த உறவுகளின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட்ட கைத் தொழிலாளர்கள் சங்கத்தின் உள்ளூர் உணவு உற்பத்திகளின் விற்பனை நிலையம் மற்றும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரண நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டச்செயலக வளாகத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

(படம்-யோசப்நயன்)

# வெடுக்குநாறிமலை பூசாரி வைத்தியசாலையில் அனுமதி

(நெளுக்குளம்)

வெடுக்குநாறி மலையின் பிரதான பூசாரியான தம்பிராசா மதிமுகராசா சுகயீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு வெடுக்கு நாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரின் வன்முறையால் ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் கடந்த 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்து பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் விடுதலையான ஆலயத்தின் பூசாரியார் சுகயீனமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை வலியுறுத்தி 5 நாட்கள் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-299)

# கோட்டை கட்டியகுளத்தின் கீழ் 350 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கோட்டைக் கட்டிய குளத்தின் கீழ் முழுமையாக 350 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் உதவி பிரதேச செயலாளர் திருமதி.நித்தியா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கோட்டைக்கட்டிய குளத்திற்கான சிறுபோக நெற்செய்கை கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி-350)

# வடக்கு ஆளுநரை சந்தித்த நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர் அன்ரேவ் ட்ராவெள்ளர் , வடக்கு மாகாண ஆளுநரை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. வடக்கு மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர் ஆளுநரிடம் கேட்டறிந்துக் கொண்டார்.

அத்துடன் புலம்பெயர் தேச த்து உறவுகளின் முதலீடு களை வரவேற்பதாகவும் வடக்கு மாகாண ஆளுநர். இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார். (நி-5-33)

# மகா கும்பாபிஷேகம்


(சாவகச்சேரி)

கைதடி கோவிலாக்கண்டி வேலம்பராய் கண்ணகி அம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.25 முதல் 10.25 வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை பகல் 11 மணி முதல் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிவரை இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48தினங்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

# நட்பின் நிமித்த சந்திப்பு



புரவலர் ஹாஷிம் உமர் அவர்களை அவரது இல்லத்தில் நட்பின் நிமித்தம் கலாபூஷணம் யாழ்.பரீட் இக்பால் சந்தித்த போது அவர்களிடமிருந்து அவரது தொகுப்பான "புரவலர்-சில பதிவுகள்" எனும் நூலை அன்பளிப்பாக பெற்றார்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு :1992 - இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 2<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/14246 | பிறப்பு-1992 -இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா- 25 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:. PHD, Teaching Assistant<br>எதிர்பார்ப்பு:அரச . தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/11178 |
| பிறப்பு:1989 - இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்- BSc, Msc, TO<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி.வேலை செய்யும் மணமகள்<br>தொ.இ: B/14257 | பிறப்பு-1995 - இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: -<br>உயரம்: 155 cm<br>தகைமை/தொழில்: HNDA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14201 |
| பிறப்பு: 1992 - இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 68<br>உயரம்: 156 cm<br>தகைமை/தொழில்: HND IT, IT Officer<br>எதிர்பார்ப்பு: அரச மற்றும் தனியார் தொழில்<br>தொ.இ: B/14269 | பிறப்பு -1997 - இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: -<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Engineer(Final Year)<br>எதிர்பார்ப்பு: உயர்வான கல்வித்தகைமை<br>தொ.இ: G/14204 |
| பிறப்பு: 1994 - இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 44 1/2<br>உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்:- A/L. (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14276 | பிறப்பு -1993 -இந்து<br>நட்சத்திரம் -பூசம்<br>கி.பா: -<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma, Teacher<br>எதிர்பார்ப்பு :நற்குணமுள்ள ஆண்<br>தொ.இ: G/14208 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மாணவர்களுக்கான விசா விதிமுறைகளை தீவிரப்படுத்திய அவுஸ்திரேலியா




(கன்பரா)

அவுஸ்திரேலியா செல்ல இருக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கான புதிய விசா விதிமுறைகள் இந்த வாரம் முதல் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவிற்கு குடியேறுபவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்ததையடுத்து அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இதேவேளை குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால், வீடுகளின் வாடகை மற்றும் இடப்பற்றாக்குறை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பட்டதாரி விசாக்கள் மற்றும் மாணவர் விசாக்களுக்கான ஆங்கில மொழித் தேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஆங்கில மொழி தொடர்பான அறிவு முன்பு எதிர்ப்பார்க்கப்பட்டதை விட சிறந்த அளவில் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சர்வதேச மாணவர்கள் தொடர்ந்து விதிகளை மீறினால் அவர்களின் கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)

# வன்முறைச் சம்

# பற்றியெரியும்

## தூதரக அதிகாரிகள்

(போர்ட்-ஒபிரின்ஸ்)

**ஹெய்ட்டி நாட்டில் தொடரும் வன்முறை மற்று துப்பாக்கிச் சூடு சம்பவங்களுக்கு மத்தியில், தெரு சடலங்கள் சிதறிக்கிடப்பதாகவும் பல நாடுகள் தூதரக அதிகாரிகளை வெளியேற்றி வருவதாகவ வெளியாகியுள்ளது.**



அமெரிக்கா மற்றும் அதன் நெருங்கிய நட்பு நாடுகளின் உதவியுடன் செயற்பட்டு வரும் ஹெய்ட்டில், உள்நாட்டு பிரச்சினை இருவேறு கும்பலாக பிரிந்து வன்முறை சம்பவத்தில் ஈடுபடும் மக்கள் என தொடர் அழிவு சம்பவங்கள் நடைபெறுகின்றன.

ஹெய்ட்டில் கூலிப்படையினரால் நாட்டின் ஜனாதிபதி படுகொலை செய்யப்பட்ட பின்னர், கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஹென்றி நாட்டின் பிரதமரானார். அதையடுத்து நாடு முழுதும் வன்முறை பெருகியது. இதனால் ஹைதியின் பிரதமர் ஏரியல் ஹென்றி தனது பதவியை அண்மையில் ராஜினாமா செய்தார். எனினும் வன்முறை சம்பவங்கள் தொடர்கிறது.

ஹெய்ட்டி பேரழிவை தடுக்க தாமதித்தால் பெருந்திரளான

அகதி
கொல
ணர்க
தொட
பல
கள் ப
தூதர
மற்ற
விட்டு
இ
தங்க
படுத்
களை
களை
யுள்ள
ஜ

## விமான நிலைய ஓடுபாதையில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி

### டுபாயின் புதுமை

(அபுதாபி)

உலகில் முதல் முறையாக டுபாய் சர்வதேச விமான நிலைய ஓடு பாதையில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. டுபாயில் கின்னஸ் உலக சாதனைகள் பல வித்தியாசமான முறையில் படைக்கப்பட்டு வருகின்றன.

இதன்ஒருபகுதியாக விமான ஓடுபாதையில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியிலும் இத்தகைய புதுமை படைக்கப்பட்டுள்ளது.

உலகில் முதன் முறையாக டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறக்கப்படும் ஓடுபாதையில் இப்தார் நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் அமீரகம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல் கலாசாரங்களை கொண்ட விமான நிலைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.




இப்தார் நிகழ்ச்சியில் பங்கேற்ற விமான நிலைய அதிகாரிகள், ஊழியர்களுக்கு பேரீச் சம்பழம், தண்ணீர் ஜூஸ், பிரியாணி உள்ளிட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்தபொருட்களை கொண்டு நோன்பு திறக்கும் நேரம் வந்ததும் அனைவரும் பிரார்த்தனை செய்து நோன்பை திறந்தனர்.

இதேவேளை, விமானங்கள் தரையிறங்குவது, செல்வதும் வழக்கம் போல் நடந்து வந்தன. இதனைப் பார்த்தவாறே நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டனர். (நி-5)

## இ.சிகரெட் பயன்ப நியூசிலாந்தில் த



(வெலிங்டன்)

நியூசிலாந்தில் இ-சிகரெட்டை பயன்படு விதிக்கப்பட்டுள்ளது. குறித்த தடை நியூசில ங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தெரிவிக் கின்றன.

அத்துடன் 18 வயதுக்குட் பட்டோருக்கு இ-சிக விற்பனை செய்தால் அவர்களுக்கு அபராதம் வி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை உலகின் பல நாடுகள் தற்போ டைப் பயன்படுத்த தடை விதித்து வருகின்ற நி சிலாந்தும் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்பவங்களால்

# ...ம் ஹெய்ட்டி

## ...ிகள் வெளியேற்றம்

...மற்றும் பெரும்
..., தெருவெங்கும்
...ாடுகள் தங்கள்
...தாகவும் தகவல்



அகதிகள் படையெடுப்பை எதிர் கொள்ள நேரிடும் என்றும் நிபுணர்கள் பலர் எச்சரிக்கை விடுக்கத் தொடங்கியுள்ளனர்.

பல்வேறு உயர்தர ஹொட்டல்கள் மற்றும் குறைந்தது ஒரு டசின் தூதரகங்கள், தங்கள் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற்றி வருகின்றனர்.

இதனிடையே அண்டை நாடுகள் தங்கள் எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளன வெளிநாட்டவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை தூதரகங்கள் தீவிரப்படுத்தியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் உட்பட 300 பேரை வெளியேற்றியதாக கடந்த செவ்வாயன்று, டொமினிகன் குடியரசு தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

ஹெய்ட்டி விமான நிலையம் மூடப்பட்டுள்ள நிலையில், ஹெலிகொப்டர்களை பயன்படுத்தித் தங்கள் குடிமக்களை வெளியேற்றி வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்களின் விலை தாறுமாறாக அதிகரித்துள்ளது. மருத்துவமனைகளில் ரத்தம், ஆக்சிஜன் உட்பட அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஹெய்ட்டி நாட்டில் 49 இலட்சம் மக்கள் ஒவ்வொரு நாளும் உணவுக்காகப் போராடுகின்றனர் என்றும், ஐந்து வயதுக்குட்பட்ட 1,15,000 இற்கும் அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும் UNICEF நிறுவனம் தெரிவிக்கிறது. (ரி-5)

## பதவியிலிருந்து விலகினார் வியட்நாம் ஜனாதிபதி



(ஹனோய்)

கடந்த ஆண்டு வியட்நாம் ஜனாதிபதியாக் பதவியேற்ற வோ வான் துவாங் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

வோ வான் துவாங் தனது சொந்தக் காரணங்களுக்காக ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதாக அந்நாட்டின் அரசு ஊடகத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வியட்நாம் நாட்டின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக பல்வேறு ஊழல் குற்றச் சாட்டுக்கள்சுமத்தப்பட்டு வருகின்றன.

இதனிடையே கட்சியின் நம்பிக்கையை குலைக்கும் வகையில் ஜனாதிபதி வோ வான் துவாங் செயற்பட்டுள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கட்சியின் நற்பெயருக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி குறிப்பிட்டுள்ளது. இந்த சூழலில் வோ வான் துவாங் பதவி விலகி உள்ளார். (ரி-5)

## பட்டினியை ஆயுதமாக்கும் இஸ்ரேல் இராணுவம்

### ஐ.நா குற்றச்சாட்டு

(நியூயோர்க்)


பாலஸ்தீனம் மீதான போரில், பட்டினியை ஆயுதமாக இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்துவதாக ஐ.நா குற்றம்சாட்டியுள்ளது.

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதலானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில் இதுவரை சுமார் 30,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இப்போரினால் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நாடுகளால் அனுப்பப்படும் உணவு, மருந்து பொருட்களையும் அவர்களுக்கு கிடைக்க விடாமல் இஸ்ரேல் இராணுவம் தடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து விசாரித்து வந்த சர்வதேச நீதிமன்றம், காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கிட இஸ்ரேல் குறுக்கே நிற்கக்கூடாது என உத்தரவிட்டிருந்த போதும் இஸ்ரேல் அதனை கடைபிடிப்பதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-5)

## ...யன்படுத்த ...தில் தடை



...டை பயன்படுத்தத் தடை ...டை நியூசிலாந்து அரசா ...ாக சர்வதேச ஊடகங்கள்

...ாருக்கு இ-சிகரெட் டினை ... அபராதம் விதி க்கப்படும்

...டுகள் தற்போது இ-சி ரெட் ...வருகின்ற நிலையில் நியூ ... குறிப்பிடத்தக்கது. (ரி-5)

## புடின் உடன் பேச்சு நடத்த வேண்டாம்

### உலக தலைவர்களிடம் நவால்னியின் மனைவி கோரிக்கை

(மொஸ்கோ)

புடின் உடன் பேச்சு நடத்த வேண்டாம் என உயிரிழந்த நவால்னியின் மனைவி, உலக தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யாவில் நடந்த அதிபர் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அபாரவெற்றி பெற்றதை அடுத்து உலக தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

இதற்கிடையே தேர்தலுக்கு முன்பாக சிறையில் மரணமடைந்த எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னியின் மனைவி யூலியா நவல்னயா ஜனாதிபதி புடினுக்கு எதிராக தனது கணவரின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாக அறிவித்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் புடின் பெற்ற வெற்றி தொடர்பாக யூலியா நவல்னயா கூறுகையில்,

தேர்தல் முடிவுகள் ஒரு பொருட்டல்ல. உலகில் யாரும் புடினை முறையான ஜனாதிபதியாக அங்கீகரிக்கவில்லை என்பதை நாங்கள் உறுதி செய்வோம்.

புடினுடன் உலகத் தலைவர்கள் யாரும் பேச்சுவார்த்தைக்கு மேசையில் உட்கார வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் அவர் ரஷ்யாவின் முறையான ஜனாதிபதி அல்ல. புடின் எங்கள் ஜனாதிபதிஅல்ல என்பதை நாங்கள் மற்றவர்களுக் [illegible]




ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் புடின் ஆட்சியை எதிர்த்துப் போராட மக்களை வலியுறுத்துகிறேன்.

நமக்கு அமைதியான, சுதந்திரமான மற்றும் மகிழ்ச்சியான ரஷ்யா தேவை. நாம் இணைந்து செயற்பட்டால் நிச்சயம் சாதிக்க முடியும் என தெரிவித்த யூலியா நவல்னயா, இதை விட்டுக் கொடுத்துவிடக்கூடாது எனவும் தெரிவித்தார். (ரி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நீர் தினம்

உலகநீர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது. பிறக்கும் எல்லா உயிருக்கும் இன்றியமையாத உயிர் நாடியாக விளங்குவது தண்ணீர். "நீரின்றி அமையாது உலகு" என்ற வள்ளுவர் வாக்கில் புதைந்திருக்கும் உண்மையை இவ்வுலகில் வாழும் உயிர்கள் யாவும் உணரும்.

**குடிநீரின் மகத்துவம்**

நம் உடலியக்க செயற்பாடுகள் அனைத்திற்கும் நீர்தான் முக்கியமானது. பாதுகாப்பான குடிநீரிலுள்ள கனிமங்களின் கிடைப்பனவுதான் ஆரோக்கியமான உயிர்வாழ்வுக்கு அடிப்படையானதாகும். உணவில் உள்ள சத்துத் தாதுக்களை தேவையான உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லவும் கழிவுகளை வெளியேற்றவும் நீர் அவசியமாகும். உயிரற்ற பொருட்களின் தூய்மையை பேணவும் உயிருள்ள அனைத்து ஜீவன்களினதும் இயக்கத்துக்கும் ஆதாரம் நீரே ஆகும்.

**குடிநீர் நெருக்கடி**

பூமியின் மேற்பரப்பில் 71 சதவிகிதப் பிரதேசத்தில் நீர் உள்ளடங்கியிருந்தாலும், 4 சதவிகிதம் மட்டுமே நன்னீராகும். அதிலும் 0.5 சதவிகிதம் மட்டுமே மனிதன் பருகுவதற்கு உகந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் மனிதன் உயிர் வாழ்வதற்கு ஆதாரமான இவ் முக்கியவளமானது இன்று பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இதன் தேவை அதிகரித்துச் செல்லும் அதேவேளை அதன் அளவும் தொடர்ச்சியாக அருகி வருகின்றது.

இன்று உலகில் 2.1 பில்லியன் மக்களுக்கு இன்னும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை. மற்றும் உலக மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம்பேர் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டு தோறும் ஐந்து வயதுக்குட்பட்ட 340,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 800,000 இற்கும் அதிகமானோர் பாதுகாப்பற்ற நீர் மற்றும் போதிய சுகாதாரம் இன்மையால் ஏற்படும் நோய்களால் இறக்கின்றனர் என ஐ.நா சபை அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளது. இதனாலேயே நீரை அடிப்படை உரிமையாக்கி உள்ளனர்.

**உலகநீர் தினம் இன்று**

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா மகாநாட்டின் தீர்மானத்திற்கு அமைவாக மார்ச் 22 ஆம் திகதியை உலகநீர் தினமாக ஐ.நா பொதுச் சபை பிரகடனம் செய்தது. அதனைத் தொடர்ந்து ஆண்டு தோறும் விசேட தொனிப் பொருளுடன் இத்தினம் நினைவு கூரப்பட்டு வருகிறது. இவ்வாண்டு "அமைதிக்கான நீரை மேம்படுத்துதல்" என்ற கருப் பொருளினை முதன்மைப்படுத்தி நீர் தினம் நினைவு கூரப்படுகிறது. நீர் மாநாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுடன் நெருக்கமாக இணைந்திருக்கும் இந்த ஆண்டுக்கான தொனிப் பொருள் அமைதி மற்றும் நிலையான வளர்ச்சியை வலியுறுத்தியுள்ளது.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் உலகின் 90 சதவீத இயற்கைப் பேரழிவுகள் தண்ணீர் தொடர்பானவை அத்துடன் அமைதிமற்றும் மோதலைத் தீர்ப்பதில் நீரின் பங்கு குறித்தும் ஐ.நா பொதுச்சபையின் இவ்வாண்டுக்கான உலக நீர் தினம் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் "காலநிலை மாற்றம், மாசடைதல் மற்றும் தண்ணீருக்கான அதிகரித்து வரும் தேவை ஆகியவை நிலையான நீர் முகாமைத்துவத்திற்கு எப்போதும் பெரிய சவால்களைச் சேர்க்கின்றன. இன்று உலகின் சில பகுதிகளில் நீர் ஆதாரங்களின் விநியோகம் மோதலுக்கு காரணமாக மாறும் சாத்தியம் உள்ளது. சர்வதேசச் சமூகம் இந்தச் சவாலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் தண்ணீர் ஒத்துழைப்பு, வளர்ச்சிக்கான ஆதாரமாகவும் அமைய வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**தற்போதைய வெப்பநிலை அதிகரிப்பும் அதன் பாதிப்பும்**

இவ்வாண்டு ஆரம்பம் முதல் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் கடும் உஷ்ணமான வானிலை நிலவுகிறது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை வெப்ப நிலை மேலும் உயர்வாகவே இருக்கும் என எதிர்வு கூறப்பட்டு. எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது நிலவுகின்ற கடும் வெப்ப நிலை காரணமாக ஏற்படும் தொடர்ச்சியான ஆவியாக்கம் எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற தரை மேற்பரப்பு மற்றும் தரைக் கீழ் நீர் நிலைகளின் நீரின் இருப்பை அருகச் செய்யும். இந்தப் பின்னணியில் நீருக்கானதேவையும் அதிகரிக்கும் இதனால் கட்டுப்பாடில்லாதநீர்ப் பாவனையினால் விரைவில் பெரும் நீர் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் தரைக் கீழ் நீரின் அளவு சடுதியாகக் குறைவடைந்து செல்கின்றது.



எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு பின்னரே இங்கு கனமழைக்கான சந்தர்ப்பம் இருப்பதனால் தரைக்கீழ் நீரின் கிடைப்பனவு பெரும் சவாலானதாக அமையும். இப்பாதிப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடிநீர் கிணறுகளில் நீர் இல்லாமை மற்றும் உவராகின்ற நிலைமைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும். எனவே இந்த மோசமான நிலைமையினை உணர்ந்து நீரைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

**நீர்ப்பாதுகாப்பு**

தொடர்ச்சியாக நீருக்கான தேவை அதிகரித்துச் செல்கின்றன. எனவே அருகிச் செல்லும் வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையுமென குறிப்பிடப்படுகின்றது. குடிநீர் தீர்ந்துபோகின்ற ஒரு வளம் என்பது பற்றிய உலகளாவிய விழிப்புணர்வு தற்போது ஏற்பட்டுள்ளது. அதனால் தற்போதைய குடிநீர்



**அ.அன்ரன் கமிலஸ்(M.Phil)**
**பொறுப்பதிகாரி,**
**தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம், கிளிநொச்சி.**

தேவையினை நிவர்த்தி செய்யும் அதேவேளை எதிர்கால தேவையினையும் கருத்திற் கொண்டு நிலைத்து நிற்கும் வளப்பயன்பாட்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வள முகாமைத்துவம் தொடர்பாக சர்வதேச நீர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**நீர் வழங்கல் திட்டங்கள்**

இலங்கையில் தேசிய ரீதியில் பல்வேறு நீர் வழங்கல் திட்டங்கள் மூலம் மக்களுக்கான கணிசமான குடிநீர் தேவை நிவர்த்தி செய்யப்பட்டாலும் வடக்கின் பாரிய நீர் வழங்கல் திட்டங்கள் எவையும் நிரந்தரமான திட்டங்களாக இறுதி செய்ய முடியாத நிலைமையை காணமுடிகின்றது. இந்த விடயம் கடந்த பல தசாப்தங்களாக பேசுபொருளாக மட்டுமே உள்ளது. இத் தொங்கு நிலைமைக்கு உள்ளூர் அரசியல்வாதிகளின் அரசியல் துருப்புச் சீட்டாக இவ்விடயம் கையாளப்பட்டமைதான் காரணம் என்பது மக்கள் பக்க அங்கலாய்ப்பாகும்.

**நீருக்கானவிழிப்புணர்வு**

நீரின் அருமையைபற்றியும் நீரைசேமிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இன்றியமையாதது. நீர் வளத்தைப் பற்றிய மக்களின் எண்ணங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவது உடனடியாக தொடங்கப்பட்டு ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும். "போதையில் உள்ளவரின் குருதியில் உள்ள நம்பிக்கை கூட போத்தலில் உள்ள குடிநீரில் இல்லை" என்ற கருத்து நிலவுகின்ற மோசமான நிலைமைக்கு உள்ளாகியுள்ளோம். சுத்திகரிக்கப்பட்டதாக வீதிவீதியாக நீரினை கூவி விற்பனை செய்கின்ற நவீன வியாபாரப் பொருளாக உள்ள குடிநீரின் நிலைமை பரிதாபத்திற்குரியது. அவை எந்த தரப்படுத்தலுக்கும் உட்பட்டவை என்ற உத்தரவாதமில்லாதவை. சுத்திகரிக்கப்பட்டதாக கூறி அனைத்து அடிப்படைக் கனிமங்களும் நீக்கப்பட்ட வெற்று நீரை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வது ஆரோக்கியமானதல்ல.

இப் புவியிலே முதல் உயிரினம் தோற்றம் பெற்றது நீரில் தான் என்றஉண்மைத் தத்துவம் காலமாற்றத்தின் பயனாக இன்று உயிரினங்கள் வாழ்வதற்குச் சவால் ஏற்படுத்தும் அளவிற்கு மாற்றப்பட்டுவிட்டது. இதில் நாம் அனைவரும் பங்காளர்கள். தற்போது எதிர்கொண்டுள்ள மிக நெருக்கடியான சமூக, பொருளாதார சவால்களுடன் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான உபாயங்களும் நீர் வளத்தினைப் பாதுகாத்து நாளைய வாழ்வுக்கான இருப்பினைஉறுதிப்படுத்த ஒன்றிணைந்து. "ஊர் வளம் பெற, பார் வளம் பெற, நீர் வளம் காப்போம்" என்று இன்றைய நீர் தினத்தில் உறுதியளிப்போம்.

# இன்று ஒரு தகவல் 72



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆப்ரஹாம் லிங்கன்

அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் ஒரு நாள் தன்னோட கோச்சு வண்டியில் தலைநகரான வோஷிங்டனுக்குப் போய்க்கொண்டிருந்தார். கோச்சு வண்டி ஒரு தெருவிலே போய்க்கொண்டிருந்தது!

அந்த தெரு ஒரு பக்கத்திலே பயங்கரமான சதுப்பு நிலம். சதுப்பு நிலம் என்றால் அது புதைகுழி. புதை மணல் என்கிறோமே அது மாதிரி!

அந்த சதுப்பு நிலத்திலே யாராவது மாட்டிக்கொண்டால் அவ்வளவுதான்! ஆளை கொஞ்சம் கொஞ்சமா உள்ளே அமுக்கிப்போடும்! தப்பிச்சு கரை வருவது கஷ்டம். அப்படிப்பட்ட நிலம் அது.

ஆப்ரஹாம் லிங்கன் ஏதோ ஒரு முக்கியமான அரசாங்க வேலையாக போயிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தார். அதனாலே அந்த சமயத்திலே அவர் விலை உயர்ந்த ஆடைகளை அணிஞ்சிருந்தார். அப்படி அவர் அந்த கோச்சு வண்டியில் வந்து கொண்டிருந்தார். அந்த சமயத்திலே ஒரு காட்சி அவர் கண்ணில் பட்டது! என்ன தெரியுமா!

ரோட்டுக்குப் பக்கதிலே இருந்த சதுப்பு நிலத்திலே ஒரு இளம் பன்றிக்குட்டி சிக்கிக்கொண்டு தவிச்சுக்கொண்டிருக்கு! பரிதாபமாக கத்திக்கொண்டிருக்கு! அதைப் பார்த்தார் லிங்கன். அவருக்கு என்னமோ மாதிரி ஆயிட்டுது! உடனே வண்டியை நிறுத்தச்சொன்னார். கீழே இறங்கினார்.

தன்னோட விலை உயர்ந்த ஆடைகளைப் பற்றி யோசிக்கவில்லை! தனக்கே ஆபத்து வரலாம் என்கிறதைப் பற்றியும் கவலைப்படவில்லை! தான் ஒரு குடியரசுத் தலைவர் என்கிறதைப் பற்றியும் அவர் நினைக்கவில்லை!

நேரா அந்த சதுப்பு நிலம் பக்கமா போனார். அந்த சேற்றிலே இறங்கி பன்றிக்குட்டியைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

அதுக்கப்புறம் நிம்மதியா வண்டியிலே ஏறி வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்தார். ஆடை, உடம்பு எல்லாம் சேறு, சகதி.

பார்க்கிறவங்களுக்கு எல்லாம் ஆச்சரியமா போச்சு!

அவங்களுக்கு ஒன்றும் புரியவில்லை!

இவர் நேரா ஆடை மாற்றிக்கொள்ளப் போனார். கோச் வண்டி ஓட்டிக்கிட்டு வந்தவன் கிட்ட ஓடிப்போய் எல்லாரும் கேட்டாங்க என்ன ஆச்சு? என்று!

அவர் வர்ற வழியிலே நடந்த விவரத்தைச் சொன்னர். ஆபிரஹாம் லிங்கனுடைய இந்த இரக்க குணத்தை எல்லாரும் பாராட்டினாங்க! புகழ்தாங்க! ஆனா இதுக்கு லிங்கன் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

தயவு செய்து இந்த புகழ்ச்சியான பேச்சையெல்லாம் ஒதுக்குங்க! அதெல்லாம் வேண்டாம்!

அந்தச் சின்ன பிராணி சகதியிலே மாட்டிக்கொண்டு துடிச்சுக்கொண்டிருந்தது! அதைப் பார்த்தேன்! உடனே என் இதயத்திலே ஒரு முள் தைச்சது மாதிரி ஒரு உணர்வு! அந்த முள்ளைப் பிடுங்கி எறிஞ்சேன்! அவ்வளவுதான்!

உண்மையிலே அந்த பிராணிக்கு நான் உதவினேன் என்கிறதை விட எனக்கு ஏற்பட்ட இன்னலைப் போக்கிக் கொண்டேன் என்கிறது தான் உண்மை! அதுதான் பொருத்தம். அப்படி இருக்கும் போது இதிலே புகழ்றதுக்கு என்ன இருக்கு? அப்படி என்றாராம் ஆபிரஹாம் லிங்கன்!

எவ்வளவு பிராக்டிக்கலான வார்த்தைகள் பாருங்க!

இந்த காலத்திலே நம்மில் பலபேர் அப்படி உண்டு. நீச்சல் தெரியாத ஒரு ஆள் தண்ணியிலே இறங்கிவிட்டான். தண்ணி ஆழம் என்கிறது பின்புதான் தெரிஞ்சது. தத்தளிக்க ஆரம்பிச்சுட்டான். வாள் வாள் என்று கத்திறான். கரையிலே நின்று கொண்டிருந்த ஒருத்தர் இதைப்பார்த்தார் உடனே அவருக்கு இதயத்திலே முள்ளு தைச்சது மாதிரி ஓர் உணர்வு. உடனே குபீர் என்று தண்ணியிலே பாய்ந்தார். அவரைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இன்னொருத்தர் காப்பாற்றின அந்த ஆளைப் பாராட்டினார். புகழ்ந்தார்.

என்னைப் புகழாதீங்க சார்! என்றார் அவர். ஏன் என்று கேட்டார் இவர்.

நான் அந்த ஆளை ஏன் காப்பற்றினேன் தெரியுமா? அவன் நேற்றைக்குத்தான் சார் என்கிட்ட 300 ரூபா கடன் வாங்கியிருக்கிறான். இவன் தண்ணியிலே போயிட்டான் என்றால் நான் குடுத்த கடனும் தண்ணியிலே போயிடுமே! அதனாலே தான் காப்பற்றினேன்ள என்றான் அந்த ஆள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1970 இற்குப் பின் யாழ்ப்பாண நகர்



பேராசிரியர். பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

இடம்பெயர்ந்து சென்ற ஆறு மாத காலத்தில் பெரும் எண்ணிக்கையினர் கொழும்புக்கும் வெளி நாடுகளுக்கும் சென்றுவிட்டனர். மிகுதியானோர் யாழ்ப்பாண நகரம், தீவுப்பகுதி மற்றும் வலிகாமம் உயர்பாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மீளக் குடியேறினர்.

1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி திரு.எஸ்.பத்மநாதன் அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்றதுடன் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகம் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்தத் தொடங்கியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குப் பதில் துணைவேந்தராகப் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மே மாதம் பொறுப்பேற்றார். இவரது நியமனத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் துரித கதியில் இயங்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அர்ப்பணிப்பான அதிபர்களின் கடின உழைப்பால் கல்வி நிறுவனங்கள் சில கிழமைகளுக்குள் இயங்கத்தொடங்கின. ஆனால் மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாண நகரம் மிகவும் கடுமையான இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. நகரம் முழுவதும் பரவலாக இராணுவ முகாம்கள் இருந்தன. நகரின் பல வீதிகள் இராணுவத்தால் தடை செய்யப்பட்ட வீதிகளாக இருந்தன. கொழும்பு செல்வதற்கு இராணுவ அனுமதி பெறவேண்டி இருந்தது. அன்று மக்கள் பிரச்சினைகளை இராணுவத்திடம் எடுத்துக்கூற அரசியல் தலைவர்கள் எவரும் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை.

இந் நிலையில் சமயத்தலைவர்கள் சமூக முக்கியஸ்தர்களைக் கொண்ட "சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான யாழ்ப்பாண மக்கள் குழு என்ற சபையை நிறுவி அதனூடாக மக்களின் பிரச்சினைகளை இராணுவத்திடம் கூறி பல விடயங்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டன. இச்சபையில் போஷகர்களாக நல்லை ஆதீன சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பேராயர் சௌந்தர நாயகம், குருமுதல்வர் நேசகுமார் மற்றும் அருட்தந்தை குருமுதல்வர் செல் வராசா, அருட்தந்தைகள் ஜெயக் குமார், சந்திரசேகரம், திரு பூரண சந்திரன் ஆகியோர்முக்கிய பங்கு வகித்தனர். இச்சபைக்கு திரு பரம நாதன் செயலாளராகவும், பேரா சிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைவராகவும் செயற்பட்டனர்.

நகரில் மீள்குடியேற்றம் ஏற்பட்ட பொழுது உலர் உணவு நிவாரண முறையில் வழங்கப்பட்டதால் உணவுப்பிரச்சினை அதிகம் ஏற்படவில்லை. ஆனால் போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகள் இன்மையால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இதற்குத் தீர்வாக 12 தொடர்புகள் கொண்ட தொலைத்தொடர்புகளை ஆரம்பத்தில் ஏற்படுத்தி முக்கிய நிறுவனங்களுக்கு அவை வழங்கப்பட்டன. பின்னர் பண்ணை தொலைத்தொடர்பு கட்டடப்பகுதி மாநகரசபை ஊழியர்களால் துப்பரவு செய்யப்பட்டு, 512 ஆவது பிரிகேட்டின் முயற்சியால் இயங்கத் தொடங்கியது.

மேலும் பல்வேறு வகைகளில் அழிவுக்குட்பட்டிருந்த வீடுகளைத் திருத்த கட்டடப் பொருட்கள் இன்மையால் அது மீள்குடியேறியவர்களைப் பாதித்தது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கட்டடப்பொருள் கூட்டுத்தாபனக் கிளையை ஸ்ரான்லி வீதியில் திறந்தது. மேலும் கூட்டுறவு மொத்த விற்பனை (C.W.E) கிளைகள் மூலம் துவிச்சக்கரவண்டியர்கள் விற்பனை செய்யப்பட்டன.



கோண்டாவில் இ.போ.ச சாலை பெரும் முயற்சியினால் ஓரிரு மாதங்களில் இயங்கத் தொடங்கியது உள்ளூர் போக்குவரத்திற்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. 1996 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து நகரம் சிறியளவில் படிப்படியாக இயங்க ஆரம்பித்தது. எனினும் பொருட்கள் பற்றாக்குறைவு, பாதுகாப்பின்மை, கைதுகள், செம்மணி நிகழ்வு காரணமாக மீள்குடியேற்றம் மந்தகதியில் இடம்பெறலாயிற்று.

ஆரம்பத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் GTZ நிறுவனம் நகரை இயக்குவதற்குப் பல வழிகளில் பங்காற்றின. எனினும் தென்மராட்சி, மற்றும் வன்னிப் பிரதேச யுத்தங்களால் A9 வீதி தடைப்பட்டு இருந்ததாலும் கப்பல்கள் மூலம் பொருட்களைக் கொண்டு வரவேண்டி இருந்ததாலும் நகர வளர்ச்சி 2010 வரையில் மிகவும் குறைவாகவே இருந்துள்ளது.

மேலும் மீள்குடியேற்றம் 1996 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பமானபொழுது படிப்படியாகவே அது நடைபெற்று 2002 இல் ஏற்பட்ட தற்காலிக சமாதான காலத்தில் அது சற்று அதிகரித்து, சமாதான நிலை முறிய மீள்குடியேற்றச் செயற்பாடு மீண்டும் வேகம் குறைந்து. 2009 இல் யுத்தம் முழுமையாக முடிவுக்கு வந்த பின்பே நகரின் குடித்தொகை துரிதமாக அதிகரிக்கத் தொடங்கியது.

நகரின் ஆரம்பகால மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனருத்தாரணப் பணிகளில் இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட (RRAN) வடக்குப் பிரதேச புனர்வாழ்வு, புனருத்தாரண நிறுவனம் பெரும் பணியாற்றியது. பல்வேறுநிறுவனங்கள் புனர்வாழ்வு பெறுவதற்குப் பெருமளவு நிதியளித்தது என்பது குறிப்பிடத்தக்கது. RRAN நிறுவனத்தால் வீரசிங்கம் மண்டபத்திற்கும், வேம்படி உயர்தரப் பாடசாலைக்கும் இந்துக்கல்லூரிக்கும் பெருமளவு நிதி வழங்கப்பட்டது. மேலும் பாதிக்கப்பட்ட நகர மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் RRAN நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. மீள்குடியேற்ற ஆரம்ப காலத்தில் பல்வேறு தேசிய, சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்கள் துயர் துடைப்பதில் களத்தில் நின்று செயற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### மக்கள் தொகை

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகள் அடங்கலான பெரிய யாழ்ப்பாணம் 1971 இல் 1,40,572 பேரையும், 1981 இல் 1,59,469 பேரையும் கொண்டிருந்து. 2012 இல் 1,18,633 பேராகக் குறைந்து 2020 இல் 1,22,359 பேராக இருந்துள்ளனர். நகரம் 1981 இல் கொண்டிருந்த மக்கள் தொகையிலும் பார்க்க 2020 இல் 37,110 பேரைக் குறைவாகக்கொண்டிருந்தது. நகரம் நாற்பது வருடங்களுக்குப் பின்னரும் பழைய குடித்தொகையைக் கொண்டிருக்காதது இதன் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கவில்லை.

இக்காலத்தில் நாட்டின் ஏனைய பெரிய நகரங்களின் குடித்தொகை பெருவளர்ச்சி கண்டுள்ளது. மேலும் 2024இல் கூட 1981 ஆம் ஆண்டு கொண்டிருந்த மக்கள் தொகையை நகர் கொண்டிருக்கவில்லை. நகரத்தில் இருந்து பெருமளவு மக்கள் வெளியேறி இருக்க, தீவுப்பகுதிகள் மற்றும் வலிகாமப் பகுதிகளில் இருந்து மக்கள் யாழ்ப்பாண நகருக்குள் குடியேறியுள்ளனர். நகரில் இன்று குறிப்பிடத்தக்க சிங்கள, முஸ்லீம் மாணவர்கள், இராணுவம் மற்றும் சிங்கள சுற்றுலாவிகளின் பிரசன்னம் காணப்படுகின்றது.

### நகரின் பின்னணிப் பிரதேசம்

நகரம் யுத்த காலத்தில் இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் மாத்திரமல்லாது குடாநாட்டின் பல பகுதிகளுடனும் கூட கொண்டிருந்த போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாண நகர் வலிகாமம் பகுதியின் தெற்குப் பகுதியை மாத்திரமே தனது பின்னணிப் பிரதேசமாகக் கொண்டிருந்தது. இன்று நகரில் இருந்து புகையிரதம் மூலம் நேரடியாக கொழும்பு மற்றும் பெலியத்தைக்குச் செல்லும் வசதி கிட்டியுள்ளது. மேலும் தரமான காப்பெற் வீதிகள் மூலம் நாட்டின் முக்கிய நகரங்கள் யாழ்ப்பாண நகருடன் இணைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, கதிர்காமம், வலஸ்முன்ன, பதுளை, மொனறாகலை, நுவரெலியா, ஹற்றன், பொத்துவில், திருக்கோவில், அம்பாறை, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு, திருகோணமலைக்கு பேருந்து சேவைகள் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் - மன்னார் கரையோர வீதி அமைக்கப்பட்ட பிறகு இரு நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துச் சேவை வெகுவாக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாண நகருக்கும் குடாநாட்டு நகரங்களுக்கும் வன்னிப்பிரதேசங்களுக்கும் இடையே தரமான போக்குவரத்து சேவைகள் இ.போ.ச வினாலும் தனியாராலும் வழங்கப்படுகின்றன.

நகருக்கும் ஏனைய நகரங்களுக்குமிடையே ஏற்பட்ட போக்குவரத்து சேவை, வளர்ச்சி நகரின் வர்த்தக மற்றும் சேவைகள் செயற்பாட்டை அதிகரித்துள்ளது. மேலும் சென்னைக்கும் பலாலிக்கும் இடையே நடைபெறும் விமான சேவையும் காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்திற்கும் இடையே நடைபெற்ற/நடைபெற இருக்கும் கப்பல் சேவையும் நகர வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

436





என் தந்தையின் உடம்பில் உயிர் உள்ளவரையில் அவர் இடும் கட்டளை எதுவானாலும் எந்தச் சந்தர்ப்பத்தில் இடப்பட்டாலும் அதுவே தெய்வத்தின் கட்டளையாகும்

அதை நாங்கள் மறுக்கவில்லை இளவரசே! சக்கரவர்த்தியின் சுதந்திரத்துக்கு மட்டுமின்றி அவருடைய உயிருக்கே அபாயம் வந்துவிடுமோ என்றுதான் அஞ்சுகிறோம். நந்தினியைப் பற்றிய முழு உண்மையை நேற்றுவரை நானே அறிந்து கொள்ளவில்லை. நேற்றிரவுதான் பார்த்திபேந்திரன் மூலமாகத் தெரிந்து கொண்டேன். அந்தப் பயங்கரமான விடயத்தைத் தாங்களும் தெரிந்து கொள்வது அவசியம்.

மூன்று வருடத்துக்கு முன்னால் மதுரைக்கு அருகில் வீர பாண்டியனோடு இறுதி யுத்தம் நடந்தது அல்லவா? அப்போது தங்கள் தமையனார் கரிகாலரும் இதோ உள்ள பார்த்திபேந்திரரும் நானும் கலந்தாலோசித்து ஒவ்வொரு காரியத்தையும் செய்து வந்தோம். பாண்டியனுடைய சைனியங்கள் அடியோடு நிர்மூலமாயின. வீர பாண்டியன் முன்னொரு தடவை பாலைவனத்தில் ஓடி ஒளிந்ததுபோல் இப்போதும் ஓடித் தப்பிக்க முயன்றான். அதற்கு இடம் கொடுக்கக் கூடாதென்று நாங்கள் மூவரும் அவனை எப்படியாவது கைப்பற்றத் தீர்மானித்துப் பெரு முயற்சி செய்தோம். இந்தத் தடவை வீர பாண்டியனுடைய தலையைக் கொண்டு போகாமல் தஞ்சாவூருக்குத் திரும்புவதில்லை என்று நாங்கள் மூவரும் சபதம் செய்திருந்தோம். ஆகையால் வேறு யாரையும் நம்புவதில்லையென்று நாங்களே அவனைத் தொடர்ந்து சென்றோம். கடைசியாக ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த குடிசையில் அவன் ஒளிந்திருப்பதைக் கண்டுபிடித்தோம். குடிசைக்கு வெளியில் எங்களைக் காவலுக்கு நிறுத்தி வைத்து விட்டுத் தங்கள் அண்ணன் கரிகாலர்தான் உள்ளே நுழைந்தார். வீர பாண்டியனைக் கொன்று அவன் தலையை எடுத்து வந்தார். நாங்களும் எங்கள் காரியம் முடிந்துவிட்டதென்று குதூகலமாகத் திரும்பிச் சென்றோம். ஆனால் அந்தக் குடிசைக்குள்ளே ஒரு சிறிய நாடகம் நடந்ததென்பது எங்களுக்குத் தெரியாது. வீர பாண்டியனுக்கு அடைக்கலம் கொடுத்திருந்த பெண் ஒருத்தி குறுக்கே நின்று தடுத்துத் தன் காதலனுக்கு உயிர்ப் பிச்சை கேட்டாள். கரிகாலர் அவளை உதைத்துத் தள்ளிவிட்டு வீரபாண்டியனுடைய தலையைக் கொய்து வெளியே எடுத்து வந்தார். இளவரசே! அவ்விதம் சோழ குலத்தின் ஜன்ம சத்துருவான வீர பாண்டியனைக் காப்பாற்ற முயன்றவள்தான் நந்தினி! அவள்தான் பிற்பாடு எழுபது வயதுக் கிழவரை மணந்து தஞ்சாவூருக்கு வந்து, பழுவூர் இளைய ராணியாக விளங்குகிறாள்! அவள் எதற்காக, என்ன நோக்கத்துடன், வந்திருப்பாள் என்பதை நாம் ஊகிக்கலாம் அல்லவா? வீர பாண்டியனுக்காகப் பழிக்குப் பழி வாங்கத்தான் வந்திருக்கிறாள். சோழ குலத்தை அடியோடு நிர்மூலமாக்கி விடுவதற்காக வந்திருக்கிறாள். அவள் அருகில் சென்றவர் யாரும் அவளுடைய மோக வலையிலிருந்து தப்பித் திரும்புவது கடினம். அதோ நிற்கும் வந்தியத்தேவன் அதற்குச் சாட்சி சொல்லுவான். சோழ குலத்தைப் பூண்டோடு அழித்துவிடப் பயங்கர சபதம் எடுத்திருக்கும் கூட்டத்தைப்பற்றி அதோ நிற்கும் வைஷ்ணவன் சாட்சி சொல்வான். அவர்களுக்கு அவசியமான பணத்தையெல்லாம் நந்தினி தான் கொடுக்கிறாள். இளவரசே! துரதிஷ்ட வசமாக நம் சக்கரவர்த்திப் பெருமானும் அந்தப் பாதகியின் வலையில் விழுந்து விட்டதாகக் காண்கிறது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## எறும்புக்கு பயந்த அரசர்

(நேற்றைய தொடர்ச்சி...)



அரசருக்கு ஆலோசனை தர வந்தவர்கள் கோட்டை வாயிலில் கூட்டமாகத் திரண்டனர். ஒருவர் ஆயிரம் கிலோ எறும்புப் பொடி வாங்கி அரண் மனை அறைகளில் தூவி விடச்சொன்னார்.

மற்றொருவர், தண்ணீரைப் பாய்ச்சி அடிக்கச் சொன் னார். மூன்றாமவர், எறும்புகளின் கண்களில் மிளகாய்ப் பொடி தூவ வேண்டுமென்றார்.

கடைசியாக ஒரு முதியவர் வந்தார். நீண்ட நாட்களாக அவருக்கு நாட்டு மன்னனைத் தைரியமுள்ள வீரனாகப் பார்க்க ஆசை. அதை, மன்னனிடம் நேரடியாகச் சொன்னால் வம்பை விலைக்கு வாங்கியது போல் ஆகிவிடும். கடுமையான தண்டனைக்கு ஆளாக வேண்டும். மன்னன் குழம்பும்படியாக முதியவர் பேசினார்.

எதிரி நாட்டு மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக மலைகளும் காடுகளும் உள்ளன. அந்த நாட்டின் மீது படையெடுக்க வேண்டும் என்றார்.

முதியவரே! [illegible] புக் கடியிலிருந்து தப்பிக்க வழிகேட்டால் எமனிடம் அனுப்ப வழி சொல்கிறீரே என்றார் அரசர்.

முதியவர் சற்றும் தளராமல் பேசினார். "எதிரி நாட்டு மலைகளிலும், காடுகளிலும் அதிகமான எறும்புத் தின்னிகள் உள்ளன. ஆகவே எதிரி நாட்டின் மீது படையெடு [illegible] தின்னிகளைப் பிடித்து வர வேண்டும்." என்று திட்டவட்டமாகச் சொன்னார்.

ஒரு நாள் கழித்து, முதியவரை அரசர் அழைத்து வரச்சொன்னார். தமக்கும், படை வீரர்களுக்கும் அவரையே போர்ப் பயிற்சி தரும்படிக் கேட்டார். தண்ணீரில் பத்திரமாக நின்றிருந்த மன்னருக்குப் போர்ப்பயிற்சி தரப்பட்டது.

எதிரி நாட்டின் மீது படையெடுக்கப் போவதாய் ஓலை அனுப்பப் பட்டது. போரும் நடந்தது. கடியூர் அரசர் வெற்றி பெற்றார். அந்த நாட்டின் காடுகளிலிருந்து எறும்புத்தின்னிகளைப் பிடித்து வந்தனர்.

அவை ஒவ்வொன்றும் பதினாறு அங்குல நாக்கை நீட்டி, அரண்மனைக்குள் ஓடின. எற்ம்புகள், அவைகளின் நாக்கில் ஒட்டிக் கொண்டன. ஒரு எறும்புத்தின்னி, கால் கிலோ எறும்புகளை விழுங்கித் தீர்த்தது.

எறும்புத்தின்னிகளின் உடம்பிலிருந்த அடுக்கடுக்கான பட்டைகள், இயற்கை தந்த கேடயமாக இருந்தன. துப்பாக்கிக் குண்டு கூட துளைக்க முடியாத உடம்பை எறும்பு களால் கடிக்க முடியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக, எறும்புகள் காலியாகின. அரசர் வெற்றியைக் கொண்டாடினார். கடியூர் நாட்டுக்கொடியில் எறும்புத்தின்னி இடம் பெற்றது.

அதன் பிறகுதான் எறும்புகள் அரண்மனைக்குள் ஏன் புகுந்தன என்ற விடயத்தையும் அரசர் தெரிந்துகொண்டார்.

அன்று முதல் எறும்பு களை மட் டுமல்ல எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டத் தொடங்கினார். ஒரே சமயத்தில் அரசரை நல்லவராகவும், முழு வீரராகவும் பார்த்த முதியவர் மகிழ்ச்சியடைந்தார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையால் சத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சியே,
அனைத்திலும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷம் ஆகும்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காணிகளை உரிமை கோருவதும் எல்லைப்படுத்துவதும் கட்டாயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

அவரின் யாழ்ப்பாண விஜயம் வலிகாமம் வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த 278 ஏக்கர் நிலத்தை கையளிப்ப தாகும்.

தமிழர் தாயகத்தில் ஏகப்பட்ட நிலங்கள் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மிகவும் சொற்பமான அளவு நிலம் இன்று விடுவிக்கப்படவுள்ளது.

இந்த நில விடுவிப்புக்காக நம் மக்கள் நடத்திய போராட்டங்கள் கொஞ்சமல்ல.

இன்று ஜனாதிபதியால் விடுவிக்கப்படுகின்ற 278 ஏக்கர் நிலத்தைத் தொடர்ந்து, படையினர் கையகப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் நிலங்கள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளைத் தொடர்ச்சியாக வலியுறுத்துவது அவசியம்.

இஃது ஒருபுறமிருக்க, இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்களின் ஏகப்பட்ட நிலங்கள் இன்னமும் உரிமை கோரப்படாமல் - எல்லைப்படுத்தப்படாமல் இருப்பதுதான் இங்கு துரதிர்ஷ்டமான விடயம்.

அதாவது புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்ற நம்மவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தங்களுக்குச் சொந்தமான நிலங்களை மற்றும் படையினரால் விடுவிக்கப்பட்ட நிலங்களை அடையாளப்படுத்துவதிலும் எல்லைப்படுத்துவதிலும் அவதானம் செலுத்தாமல் இருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக பல வருடங்களுக்கு முன்னதாகப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்ற நம்மவர்கள் முதுமை காரணமாகவும் அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் பிறந்ததன் காரணமாகவும் தாயகத்தின் மீது கருசனை இல்லாதவர்களாக இருப்பதால், எத்தனையோ ஏக்கர் நிலம் உரிமை கோரப்படாமல், எல்லைப்படுத்தப்படாமல் கிடக்கின்றது.

இங்குதான் குறித்த நிலத்தைப் படையினர் அரச நிலமாக அடையாளப்படுத்துகின்றனர். அல்லது குறித்த நிலம் சிலரால் அபகரிக்கப்படுகிறது. அல்லது அந்த நிலம் எந்தவித பராமரிப்புமின்றிக் காடுபத்திக் கிடக்கிறது.

இஃது மிகவும் மோசமான நிலைமையைத் தோற்றுவிக்கிறது.

எனவே குறித்த நிலத்தின் உரிமையாளர்கள் வெளிநாடுகள் உட்பட எங்கிருந்தாலும் அந்தக் காணிகளை, தாங்கள் உரிமை கோரிப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கு அல்லது நிலமற்ற நம்மவர்களுக்கு நன்கொடையாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைச் செய்யாமல் ஏனோதானோ என்று இருப்பதானது, நில மீட்புக்கு மிகப்பெரும் தடைகளையும் தடங்கல்களையும் ஏற்படுத்தும்.

ஆகவே எத்தனையோ நம் மக்கள் குடியிருப்பதற்கு ஒரு துண்டு நிலம் இல்லையே என்று மனம் நொந்து கொள்ளும்போது, வெளிநாடுகளில் அல்லது உள்நாட்டில் இருக்கின்றவர்கள் உரிமை கோராத தங்களின் காணிகளை நிலமற்றவர்களுக்கு வழங்கி பூதானம் செய்ய வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் எங்கள் நிலத்தை பாதுகாப்பதும் நிலம் தொடர்பான சிக்கல்களைத் தவிர்ப்பதும் சுலபமாகும்.

---

## நாடு அராஜக நிலைக்கு செல்வதைத் தடுக்க
# சபாநாயகர் மகிந்த துணிவுடன் தீர்மானம் மேற்கொண்டார் - பந்துல

(கொழும்பு)

போராட்டத்தின் போது நாடு அராஜக நிலைக்கு செல்வதைத் தடுப்பதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன துணிவுடன் தீர்மானங்களை மேற்கொண்டார்.

அதனால் அவரின் அர்ப்பணிப்புக்கு நன்றி செலுத்தும் வகையில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கு வெளிநாட்டு விஜயத்தையும் கைவிட்டு நாடு திரும்பினேன் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் சிறந்த பாராளுமன்ற ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற முறைமை மிக மோசமான நெருக்கடிக்கு உள்ளாகும் நிலையில் அதற்காக நாம் பங்களிப்பு வழங்குவதா என நான் கேட்க விரும்புகிறேன்.

1980 ஆம் ஆண்டு நான் இந்த பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு வரும்போது இங்கு இருந்த நிலைமை முற்றிலும் வித்தியாசமானது. அந்த காலம் தொடர்பில் புரிதல் இல்லாத சிலர் இக்காலம் தான் மிக மோசமானது எனக்கூறுவர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் அனைவரும் திரட்டுப் பாராளுமன்றம் என்றும் அதற்கு எதிராக போராட்டம் செய்ய வேண்டும் என்றும் கூறிய காலம் அது.

சபாநாயகருக்கு எதிரான குற்றச்சாட்டை முறையாக முன்வைக்காமல் வன்முறையற்ற ஜனநாயக நாடாக இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும். தற்போதைய சபாநாயகரை போன்று எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் வழங்கிய வேறு சபாநாயகர்கள் வரலாற்றில் கிடையாது.

அத்துடன் போராட்டத்தின் போது நாடு அராஜக நிலைக்கு செல்வதை தடுப்பதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன துணிவுடன் மேற்கொண்ட செயற்பாடுகள் நன்றியுடன் நினைவு கூரத்தக்கது. அதனால்

அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சர்வதேச நிதி மாநாட்டுக்காக வெளிநாட்டுக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்த நான், அந்த மாநாடு நிறைவு பெறாத நிலையில் இடை நடுவில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்காக நாடு திரும்பினேன் என்றார். (ம-7,10)

---

## திருகோணமலையில்
# மோ.சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பூநகர் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன், மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றைய நபர் படுகாயமடைந்து மூதூர் தள வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை (21) மாலை இவ் விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இவர்கள் திருகோணமலைக்கு வந்து, மீண்டும் மட்டக்களப்பு நோக்கி இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த மின் கம்பத்துடன் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இவ்விபத்து சம்பவத்தில் மட்டக்களப்பு, செங்கலடி, கணபதிப்பிள்ளை நகரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் மதுசாந் வயது (22) என்ற நபரே உயிரிழந்துள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10)

---

# முல்லை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உறுப்பினர்கள்
## ரி.ஐ.டியால் விசாரணைக்கு அழைப்பு

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உறுப்பினர்கள் சிலர் ரி.ஐ.டியினரால் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முல்லைத்தீவிற்கு வருகை தந்த விஷேட ரி.ஐ.டி குழுவினர் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுக்காற்று தலைவரை விசாரணைக்காக அழைத்து சென்றுள்ள அதேநேரம் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரை இன்று விமான நிலையத்தில் அமைந்துள்ள ரி.ஐ.டி அலுவலகத்திற்கு சமூகம் தருமாறு அழைப்பு கடிதத்தினை குறித்த தரப்பினரிடம் வழங்கியுள்ளனர்.

குடிவரவு குடியகல்வு தொடர்பான குற்றம் ஒன்றில் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த நபர்களை விசாரணைக்காக அழைக்கப்படிருக்கலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (ம-7,10,299)

---

## தலைமன்னார் கடற்பரப்பில் கைதான
# 7 இந்திய மீனவர்களும் 28 ஆம் திகதி வரை மறியலில்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று வியாழக்கிழமை மாலை உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை (20) இரவு இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து 2 படகுகளில் மீன் பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த மீனவர்களை நேற்று வியாழக் கிழமை(21) மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை முன்னெடுத்த மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை இம் மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம-7,10,285)

---

# மகா கும்பாபிஷேகம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான (பெருமாள் கோவில்) மகா கும்பாபிஷேகப் பெருவிழா வானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை(24) காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரையிலான சுப முகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு அடியவர்கள் இன்றும் நாளை மதியம் 12.00 மணிவரையும் எண்ணைக்காப்பு சாற்றி வழிபாடாற்ற முடியும்.

கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி


## கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


27



"கருத்தும் கொள்கையும் மட்டுமின்றி அவை சிறந்த வடிவத்தோடும் தாளத்தோடும் உவமையோடும் இசையோடும் மனதில் என்றென்றும் நிற்க வைக்கும் கவிநயத்தோடும் படிக்கிறோம் கேட்கிறோம் சுவைக்கிறோம் என்று கூறிய தாமஸ், திருக்குறளை ஒரு கவிஞர் நிலையிலிருந்து வேறு மொழிகளுக்கு மொழிபெயர்க்கவேண்டும் என்றார்அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த ஜப்பானிய இனத்தவரான தாமஸ் ஹிட்டோஷி புருக்ஸ்மா.

ஆய்வுக்கட்டுரைகளில் பெரும்பாலானவை எழுத்தியல், வாழ்வியல் சார்ந்தவை. இலக்கண நூல் வழியாகவும் பேச்சுவழக்கு வாயிலாகவும் தமிழ் மொழிக் கூறுகளை நுணுகி ஆராயும் கட்டுரைகள் பல படைக்கப்பட்டிருந்தன.

பண்டைய நூல்களின் செய்யுள் வகைகள், தற்கால நூல்கள், தமிழகத்திற்கு வெளியே இயற்றப்பட்ட புனைவுகள் போன்றவற்றை ஒட்டிய தலைப்புகள் இடம் பெற்றன. அரசியல் மற்றும் ஊடகத்துறையைச் சேர்ந்த தமிழர்கள் பற்றியும் உணவு, வேளாண்மை, பாரம்பரிய மருத்துவம் பற்றியும் ஆய்வுகள் எங்கெங்கோ அகன்றன.

'இணையக் காலகட்டத்தில் தமிழ் மொழி' என்ற மாநாட்டின் கருப்பொருளுடன் சில கட்டுரைகளே பொருந்தின. 'உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக வலைத்தளங்கள் வழியான போலி செய்திகள்' என்ற கட்டுரை அதில் ஒன்று.

செயற்கை நுண்ணறிவு அதன் வேர்களை ஊன்றிக் கிளைகளாக விரியும் இக்காலகட்டத்தில் அது தொடர்பான கட்டுரைகள் மாநாட்டில் இடம்பெற்றிருக்கலாம் எனத் தோன்றியது. இத்தகைய விவகாரங்களைத் துணிச்சலுடனும் அதே நேரத்தில் முறைமை பின்பற்றியும் தமிழ் வழியாக ஆராய்வது மொழியின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தக் கைகொடுக்கும்.

இத்தனை தமிழர்கள் ஒரே இடத்தில் திரண்டுவர மாநாடு ஒரு வாய்ப்புள்ளதால் தாம் மகிழ்வதாகக் கூறினார் கோலாலம்பூரைச் சேர்ந்த ஆசிரியர் மாரிமுத்து அய்யாதுரை இருந்த போதும் மாநாட்டின் கருப்பொருளின் அடிப்படையில் பெரும்பாலான படைப்புகள் அமையாதது ஒரு குறையாகும் என்றார் அவர்.

முந்தைய ஆராய்ச்சி மாநாட்டுக்கும் அண்மையில் நிகழ்ந்த ஆராய்ச்சி மாநாட்டுக்கும் இடையே புதுமையோ உருமாற்றமோ இருப்பதாகத் தெளிவாகத் தென்படவில்லை என்றார் கிள்ளானைச் சேர்ந்த இயந்திரப் பொறியாளர் ஆறுமுகம் சிங்காரம்.

"இனிவரும் காலங்களில் தமிழ் மொழி விழா என்று சொன்னால் மட்டும் போதும். ஆராய்ச்சி மாநாடு எனச் சொல்லவேண்டாம்," என்றார் அவர்.

படைக்கப்பட்ட கட்டுரைகள் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு மலராக வெளியிடப்பட்டால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும் என்று தஞ்சாவூரைச் சேர்ந்த முனைவர் உ. பிரபாகரன் கூறினார்.

வெவ்வேறு இடங்களாகப் பிரிந்து செல்லாமல் ஒரே இடத்தில் கட்டுரைப் பகிர்வுகள்அனைவரின் முன்னிலையில் இடம்பெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்றார் கிள்ளானைச் சேர்ந்த தமிழ்ப்பள்ளி ஆசிரியர் கலாராணி சிவராமன். இருப்பினும் மாநாட்டை அவர் பாராட்டி தமிழ் அழியும் எனச் சொல்வோர் மத்தியில் தமிழ் எவ்வாறு வாழும் என்பதைத் தெளிவுபடுத்தும் மிக அருமையான நிகழ்வு இது என்றார் கலாராணி.

அடுத்த மாநாடு சிங்கப்பூர், தமிழகம் அல்லது புதுச்சேரியில் நடைபெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் நிறைவு விழாவில் கூறினர்.

### உலகத் தமிழ்ச்சங்கம்

உலகத் தமிழ்ச்சங்கம் என்பது தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஆய்வுக்கும் தமிழ் நாடு அரசால் மதுரையில் அமைக்கப்பட்டிருக்கும் ஓர் அரசு நிறுவனமாகும். இவ்வளாகத்தைத் தமிழக முதல்வர் 1 மார்ச் 2016 அன்று காணொளிக் காட்சிவாயிலாகச் சென்னையிலிருந்தவாறே திறந்து வைத்தார்.

பன்னாட்டு அளவிலான கருத்தரங்க கூடங்கள், ஆய்வரங்கம், நூலகம், பார்வையாளர் அரங்கம் இதில் இடம்பெற்றுள்ளன. இவ்வளாகச் சுற்றுச்சுவர்களில் 1330 திருக்குறள் பொறிக்கப்பட்டுள்ளது.

காந்தி அருங்காட்சியகம் எதிரே செயற்படும் பழந்தமிழர் பெருமைகளை விளக்கும் சங்கத் தமிழ் காட்சிக்கூடம் இவ்வமைப்பின் ஓர் அலகாகச் செயற்படுகிறது.

தமிழ் நாடு அரசு நிதியுதவியுடன் 1981 ஆம் ஆண்டு மதுரையில் நடத்தப் பெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் மதுரையில் உலகத் தமிழ் சங்கம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து 1982ஆம் ஆண்டில் உலகத் தமிழ்ச்சங்கம் அமைப்பதற்கான அரசு ஆணை வெளியிடப்பெற்று உலகத் தமிழ்ச் சங்க அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக மதுரையில்14.5 ஏக்கர் நிலமும் பெறப்பட்டது. பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் இத்திட்டம் செயற்படுத்தப்படாமல் இருந்து வந்தது.

2011ஆம் ஆண்டு சட்டப் பேரவைக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா, மதுரையில் உலகத் தமிழ்ச்சங்க அமைப்பிற்கான பணியினைச் செயற்படுத்திட அறிவிப்பு வெளியிட்டதுடன் உலகத் தமிழ்ச்சங்க அலுவலகக் கட்டுமானப் பணிகள் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கச் செயற்பாடுகள் போன்றவைகளுக்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்தும் உத்தரவிட்டார்.

### உலகச் செம்மொழிகள்

ஒரு மொழியை செம்மொழி எனக் கூற வேண்டுமானால் அது முழு வளர்ச்சியை அடைந்துவிட்டதாக இருக்க வேண்டும். முழு வளர்ச்சியின் அளவுகோல் என்ன வென்றால் மொழியின் பயன்பாட்டில் மாற்றம் இல்லாமல் இருப்பதே ஆகும். அதாவது கால மாற்றத்தால் புதிய புதிய சொற்கள் உருவாக்கப்பட்டாலும் மொழியின் தன்மை மாறக்கூடாது. ஒலி அமைப்பில் எந்தவித வேறுபாடும் இருக்கக்கூடாது. ஒரு மொழி முழு வளர்ச்சி அடைய ஒரு கால அவகாசம் தேவை.

உலகில் தொன்மையான, தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ள மொழிகள் சிலவற்றை செம்மொழிகள் என அறிவித்துள்ளனர். உலக மக்கள் பேசும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை 7105 என கணக்கிட்டுள்ளனர். இவற்றில் இந்தியாவில் மட்டும் 1652 மொழிகள் பேசப்படுவதாக மொழியியலாளர்கள் கூறுகின்றனர். மொழிகள் எண்ணிக்கை உலக அளவிலும் இந்தியாவிலும் கூடுதலாக இருக்க ஒரே காரணம் ஆயிரக்கணக்கான பழங்குடி இன மக்கள் கொண்டது இந்த உலகம் என்பதே.

உலகச்செம்மொழிகளின் வரிசையில் தமிழ் இடம் பெற்றிருப்பது அனைவருக்கும் பெருமை தரக்கூடிய மகிழ்ச்சியான செய்தி. உலக அரங்கில் தமிழுக்குக் கிடைத்திருக்கும் தன்னிகரற்ற பெருமை இதுவாகும். இந்தப் பெருமை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழுக்குக் கிடைத்திருக்க வேண்டும். தற்போது கிடைத்திருப்பது ஓரளவிற்கு மனநிறைவை தமிழ் மக்களிடமும், தமிழ் அறிஞர்களிடமும் ஏற்படுத்தியுள்ளது.

உலகின் செம்மொழிகள் என்ற நிலையில் கிரேக்கம், சமஸ்கிருதம், இலத்தீன், பாரசீகம், அரபு, எபிரேயம், சீனம், தமிழ் ஆகிய எட்டு மொழிகள் கொள்ளப்படுகின்றன.

கிரேக்க மொழி பாரம்பரியம் மிக்க மொழியாகும். இந்த மொழியின் வரிவடிவம் கி. மு. 700 ஆம் நூற்றாண்டில் தோன்றியதாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இம்மொழியில் உள்ள இலக்கிய வளங்கள் அதிகம். ஹோமர் எழுதிய இலியது, ஒடிசி ஆகிய மாகாப்பியங்களும், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோரின் தத்துவ நூல்களும் இம்மொழியின் பெருமையை உலக அளவில் நிலைநிறுத்தி வருகின்றன.

சமஸ்கிருதம் இந்தியாவின் பழமையான மொழிகளுள் ஒன்றாகும். இந்த மொழியில் கி. மு. 1500 முதல் கி. மு. 2000வரை வேதங்கள் தோன்றின. இதற்கடுத்து இராமாயண, மகாபாரத இதிகாசங்கள் தோன்றின. இதனைத் தொடர்ந்து முப்பத்தாறு வகைப் புராணங்கள், தந்திர நூல்கள், காவியங்கள் போன்றன எழுந்தன. பாணினி படைத்த அஸ்டத்தியாதி ஒப்பற்ற இலக்கண மொழிக்கூறுடைய நூலாக அமைந்தது.

காளிதாசரின் காவியங்கள், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் போன்றனவும் தனித்த இலக்கியச் சிறப்பினை இம்மொழிக்கு அளித்தன. மார்க்ஸ் முல்லர், கெல் புரூக் போன்ற அயல்நாட்டவர்கள் வடமொழியின் சிறப்பினை மொழி பெயர்ப்புகளின் வாயிலாக உலக அளவிற்கு எடுத்துச் சென்றனர். இதன் காரணமாக இந்திய மொழிகளில் வடமொழி செம்மொழி வரிசையில் முன்பாகவே இடம்பெற முடிந்தது.

இலத்தீன் மொழி இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானிஷ் போன்ற மொழிகளுக்கு அடித்தளமாக இருந்து வருகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 12 பொருட்களின்...

வாடிக்கையாளர்கள் புதிய விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்றும் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பெரிய வெங்காயம் 100 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 550 ரூபாயாகும்.

சிவப்பு கௌபி 52 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 998 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

வெள்ளை கௌபி 50 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1,100 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாஸ்மதி அரிசி 20 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 650 ரூபாயாகவும்

சிவப்பு வெங்காயம் 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 350 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும் வெள்ளைச் சீனி 5 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 265 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனி 5 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 425 ரூபாயாகவும் சோயா மீட் 5 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 595 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

சிவப்பு அரிசி 2 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 168 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பண்டிகைக் காலத்தில் வழங்கப்படும் 4,500 மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் தற்போது 3,480 ரூபாய்க்கு அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் கொள்வனவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த பொருட்கள் பொதியில் நூடில்ஸ் பக்கெட், இடியப்ப மா, பப்படம், வினாகிரி, கிரீம் கிரேக்கர் பிஸ்கெட், சோயா மீட், 400 கிராம் பால்மா, தேயிலை பக்கெட், ரின் மீன், 2 கிலோ கிராம் வெள்ளை அரிசி மற்றும் 500 கிராம் பருப்பு ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளதாக சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-7,10)

## மோட்டார்...

காணி ஒன்றில் உரிமையாளர் நேற்று துப்பரவுப் பணிகளை மேற்கொண்ட போது காணியில் மோட்டார் ஷெல் இருந்துள்ளதை கண்டுள்ளார்.

இதையடுத்து கொக்குளாய் பொலிஸாருக்கு காணியின் உரிமையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் ஷெல்லினை மீட்டுள்ளனர். (ம-7,10,299)

## 337 மில்லியன்...

யின் மீளாய்வுக்கு பின்னர் இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி விடுவிக்கப்படுமென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கடன் திட்டத்தின் நியதிகளுக்கு அமைய, உத்தியோக பூர்வ கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தங்களை நிறைவு செய்தலும் பிரதான தனியார் கடன் வழங்குநர்களுடன் கொள்கை அளவிலான ஒப்பந்தங்களை எட்டுவதும் இலங்கைக்கு முக்கியமானதென சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7,10)

## இந்திய மீனவர்...

இந்திய மீனவர்களது எல்லைதாண்டிய அத்துமீறும் செயற்பாட்டை கண்டித்து யாழ்.மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடர்கின்ற நிலையில் தமக்கு ஆதரவு தெரிவித்து எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரோ அமைச்சரோ வரவில்லை என உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து கடந்த 19ஆம் திகதி காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செல்லத்துரை நற்குணம், அன்ரன் செபராசா, சின்னத்தம்பி சண்முகராஜா மற்றும் அந்தோணிப்பிள்ளை மரியதாஸ் ஆகிய நான்கு மீனவர்களே உணவு தவிர்ப்பு போராட்டத்தில் மூன்றாவது நாளாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் ஒரு மீனவரின் உடல் நிலை தற்போது கவலைக்கிடமாக உள்ளது. குறித்த மீனவர்களின் உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ்.தையிட்டி அன்னை வேளாங்கண்ணி கடற்றொழில் சங்கத்தினர் கலந்து கொண்டனர். (ம-7,10,33)

## இணைய...

இந்தச் சட்டத்தின் புதிய வரைபை தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கடந்த 2 நாட்களாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

பாராளுமன்றத்தின் சம்பிரதாயங்கள் குறித்து பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மரித்து எழுந்தவர்களை போல் சிலர் பேசுகிறார்கள்.

இலங்கையில் தற்போது தீர்வு காண வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன.

இணையவழி பாதுகாப்பு சட்டம் தொடர்பில் நீதிமன்றத்தால் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இந்த சட்டத்தில் உள்ள சில சரத்துக்களின் நடைமுறைமாத்திரம் தடை செய்யுமாறு நீதிமன்றம் வலியுறுத்தியது.

இந்த நிலையில், குறித்த சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, அதனைச் சான்றுப்படுத்த சபாநாயகருக்கு அதிகாரம் உள்ளது.

அரசியலமைப்புக்கமைய அவருக்கு குறித்த பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதில் சிக்கல்கள் இருக்கின்றன.

அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். எனினும், நம்பிக்கையில்லாப்பிரேரணையை கொண்டு வருவது இதற்கு தீர்வல்ல.

தற்போது இந்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் முன்மொழிந்துள்ளார். இது தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகிறோம்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## விற்பனை...

சொந்தமான முதலாவது எரிபொருள் கப்பல் வருகை தந்துள்ளது.

குறித்த கப்பலானது, நேற்று கொழும்பு துறைமுகத்தில் தரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி, இன்று முதல் 150 நிரப்பு நிலையங்கள் மூலம் இந்நிறுவனம் எரிபொருள் விற்பனை செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1880ஆம் ஆண்டு முதல் இலங்கையில் செயற்பட்டு வந்த ஷெல் எரிபொருள் நிறுவனம் 1961ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினால் அரசுடைமையாக்கப்பட்டது.

அதன் பின்னர் இந்த நிறுவனம் ஆசியாவில் தமது செயற்பாடுகளை இலங்கையிலிருந்து அகற்றி சிங்கப்பூரில் ஆரம்பித்து இன்று சிங்கப்பூரில் மாபெரும் நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில், 63 வருடங்களின் பின்னர், ஷெல் நிறுவனம் இலங்கையின் எரிசக்தி துறையில் மீண்டும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.03.21 — சீட்டிழுப்பு இலக்கம் 5426 — N 2 8 8 0 9 2
அத சம்பத — N 8 0 9 2 — 37030 — சீட்டிழுப்பு இலக்கம் 001

தன நிதானய — திகதி - 2024.03.21 — சீட்டிழுப்பு இலக்கம் - 1456 — K 25 44 54 77 K — 19239

மெகா பவர் — திகதி 21/03/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1774 — D 24 24 35 73 76 — 90047

லக்கி 7 VIP — திகதி 2024.03.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0252 — D 9 6 3 5 5 8 D

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3668 — சீட்டிழுப்பு திகதி 21.03.2024 — A 13 16 33 65 — A 79215

ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2024.03.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0735 — ரிஷபம் 16 42 50 57 ரிஷபம் — 53603 — 04

சுபிரி வாசனா — 21.03.2024 — வெற்றி வாரம் 134 — மஞ்சள் — K 0 1 0 2 6 1 W — 31,631,312.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2400 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 21.03.2024 — தினம் வியாழன் — 25 29 44 46 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,542,397.60

சனிதா — திகதி 2024.03.21 — வெற்றி வாரம் 4561 — சிவப்பு — 05 31 43 67 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,749,464.40

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4112 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2024.03.21 — தினம் வியாழக்கிழமை — 04 05 07 23 — கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.13,047,468.40

லக்ன வாசனா — 1576 — 21.03.2024 — வியாழன் — Q 23 05 18 23 55 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 513,256,097.40

அட கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் : 2226 — சீட்டிழுப்பு திகதி : 2024.03.21 — 15 19 52 56 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.100,754,483.20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
- விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை நாலரை இலட்சம் 450,000/=

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : 071 173 3911, 076 853 5022**

(181)



## விற்பனைக்கு

அரச அங்கீகார முத்திரையிடப்பட்ட நிறுவைத் தராசு வகைகள் 10Kg, 15Kg, 30Kg, 150Kg, 300Kg யாவும் ஒரு வருட உத்தரவாதத்துடன் நிதான விலையில் விற்பனைக்குண்டு.

**நந்தலாலா இரும்பகம் யாழ்ப்பாணம்**

**021 222 6234**
**077 780 5950**

(182)



**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு **076 636 3378 | 076 097 3127**



## IELTS 23.03.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**

**077 798 9830** By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

O/L மாணவர்களுக்கான விசேட group ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்

(153)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலிகள்



பழம்பெரும் நாடக நடிகரும் திரைப்பட நடிகருமாகிய எமது அன்புத் தெய்வம்

## அமரர் தங்கராசா நல்லதம்பி

**நடித்த நாடகங்களில் சில**
பணப்பித்தன், பணத்திரை, பணமா? பாசமா?, கன்னிக்கோட்டை, பாலைவனம், பருவச்சுமை

**நடித்த திரைப்படம்**
பாலைவனம்

**கலை பண்பாட்டுக் கழகத்தினருக்காக**
வீதி நாடகம்

மண்ணில் 11.07.1948 — விண்ணில் 21.02.2024

பலவகையிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றிகள். இன்று மதியம் இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றோம்.

வீரபத்திரர் கோவிலடி,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

(0174)

குடும்பத்தினர்


## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (0176)

**074 17 37 684**



## வீடு வாடகைக்கு தேவை

மூவர் கொண்ட குடும்பத்திற்கு கொமட் வசதியுடன் வீடு உரும்பிராய், கோப்பாய், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் உடன் தேவை.

**077 228 3675**
**077 818 5978**

(0178)



## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
**0777068777**

(C-8587)



## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8587)




மீசாலை வடக்கு - கொடிகாமம்

# ஆலடிப்புலம் ஸ்ரீ நடராஜ கந்தசுவாமி திருக்கோயில்

# சப்பற திருவிழா

**22.03.2024**

முருகன் அடியவர்களே!

நிகழும் மங்கலகரமான சோபகிருது வருடம் பங்குனி மாதம் 9ஆம் நாள் (22.03.2024) வெள்ளிக்கிழமை இன்று மாலை 6.00 மணிக்கு திரயோதசி திதியும் மக நட்சத்திரமும், கூடிய சுபமுகூர்த்தவேளையில் சப்பறத் திருவிழா நடைபெற எம் பெருமான் திருவருள் பாலித்துள்ளார்.

**மகோற்சவ குரு**
சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக்குருக்கள்
(சங்கத்தானை)
ஸ்தானிய குரு
பிரம்மஸ்ரீ கோபிநாதசர்மா

**சப்பற நிர்மாணம்**
ஸ்தபதி தம்பிராசா கதிர்காமநாதன்
(மட்டுவில்)

**சப்பற உபயம்**
விநாயகமூர்த்தி புதல்வர்கள்
(மீசாலை வடக்கு)

**பூமாலை அலங்காரம், சாத்துப்படி**
வேணுகாஸ் (மட்டுவில்)

**ஒலி ஒளி அமைப்பு**
பவா
(மீசாலை)
**மோகன் ஒலி அமைப்பு**
(யாழ்ப்பாணம்)

**நாதஸ்வரம்**
நாதஸ்வர வித்துவான் சங்கீத வாருதி **சுந்தரமூர்த்தி தேவதாஸ்**
நாதஸ்வர இசைத் தென்றல் **NR தர்சன்**
நாதஸ்வர இளவரசன் **NR தர்சனன்**
நாதகான தென்றல் **S.U.பிருந்தாபன்**
நாதஸ்வர இளஞ்சுடர் **T.அபிலாஸ்**

**தவில்**
இளம் தென்றல் இளவரசன் **M.S. தட்சணாமூர்த்தி**
தவில் சுடரொளி **M.S.துளசிபரன்**
தவில் சுடரொளி **N.R.தர்சீலன்**
தவில் இளவரசன் **N.R.சிவசாகித்தியன்**
தவில் வித்துவான் **ஜெயந்தன்**

ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான்
P.S.ஜெயசங்கர் அவர்களின் உதவியுடன்
தமிழ்நாடு தவில் மேதை
கலைமாமணி கலாபூசணம் கோவிலூர்
**K.G. கல்யாணசுந்தரம்**
கலந்து சிறப்பிக்கும் **விசேட மேளக்கச்சேரி**

**கோவில் மங்கள வாத்தியம்**
சிவசங்கர் குழுவினர்
சங்கத்தானை

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தருவதோடு எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
அத்தோடு அன்றைய தினம் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

(177)

இங்ஙனம் : ஆலய ஆதீன கர்த்தா
**சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்த குருக்களும்**
**சப்பறத் திருவிழா உபயகாரர்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தா [illegible] எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.